
# வானவில்

# VAANAVIL

இதழ் 137 | வைகாசி 2022

ISSUE 137 | MAY 2022


# பொருளாதாரப் பிரச்சினை அரசியல் பிரச்சினையாக மாறியது எவ்வாறு?




இலங்கையில் ஏற்பட்ட பொருளாதாரப் பிரச்சினை இப்பொழுது அரசியல் பிரச்சினையாகவும் மாற்றமடைந்திருக்கிறது. இதில் பொருளாதாரப் பிரச்சினை என்பது நீண்டகாலமாக உருவாகி வந்த ஒன்று. ஆனால் அரசியல் பிரச்சினை என்பது திடீரென திட்டமிட்டு உருவாக்கப்பட்ட ஒன்று.

பொருளாதாரப் பிரச்சினையால் மக்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பது உண்மையே. உணவுப் பொருட்கள், எரிபொருள், சமையல் வாயு, மருந்துகள் என்பனவற்றுக்கு கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதுடன், அவற்றின் விலைகளும் பல மடங்கு அதிகரித்துள்ளன.

இவற்றில் எரிபொருள், சமையல் வாயு, மருந்துகள் என்பனவற்றுக்கு இறக்குமதியில் தங்கியிருப்பதைத் தவிர வேறு வழியில்லை. இவற்றை இறக்குமதி செய்வதானால் அமெரிக்க டொலர் வேண்டும். ஆனால் இலங்கைக்கு வழமையாக வந்த வெளிநாட்டு செலாவணியான டொலர் வருவது நின்று விட்டது. அதற்குப் பல காரணங்கள் இருப்பினும் டொலர் இல்லாமையால் பொருட்களை இறக்குமதி செய்ய முடியவில்லை. அதுவே இன்றைய மோசமான நெருக்கடி நிலைமைக்குக் காரணம்.

ஆனால் உணவுப் பொருட்களைப் பொறுத்தவரை இலங்கை திட்டமிட்டுச் செயற்பட்டிருந்தால், அவற்றுக்கு இறக்குமதியில் பெருமளவு தங்கியிருக்காமல் சுயசார்பாகவே ஓரளவு நிலைமையைச் சமாளித்திருக்க முடியும். ஆனால் அந்த வகையில் இதுவரை பதவியில் இருந்த அரசாங்கங்கள் (சிறீமாவோ பண்டாரநாயக்க அரசைத் தவிர) எதுவும் செயற்பட்டிருக்கவில்லை என்பதே உண்மை.

இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதற்கு ராஜபக்சாக்கள் தான் முழுக்க முழுக்க காரணகர்த்தாக்கள் என்ற பிரச்சாரத்தை எதிர்க்கட்சிகளும் அவர்களுக்குச் சார்பான ஊடகங்களும் செய்து வருகின்றன. ஆனால் உண்மை என்ன?

இலங்கையின் பொருளாதார நெருக்கடி 1977 இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி ஏற்பட்ட கையோடேயே ஆரம்பமாகிவிட்டது. 1970 – 77 காலகட்டத்தில் திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையில் ஆட்சியில் இருந்த மக்கள் முன்னணி அரசாங்கம் அமுல்படுத்தியிருந்த இறக்குமதி கட்டுப்பாட்டுக் கொள்கையை ஜே.ஆர். அரசாங்கம் ‘திறந்த பொருளாதாரக் கொள்கை’ என்ற பெயரில் பதவிக்கு வந்ததும் உடனடியாக நீக்கிவிட்டது. அதன் காரணமாக கண்ட கண்ட பொருட்கள் எல்லாம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டன. அவற்றை இறக்குமதி செய்வதற்காக இலங்கை பெரும் தொகை பணத்தை (டொலர்களை) வெளிநாடுகளில் இருந்து கடன் வாங்கியது. அந்தக் கடன் வாங்கும் கொள்கையை தொடர்ந்து வந்த அரசாங்கங்களும் மேற்கொண்டன.

சிறீமாவோ பண்டாரநாயக்க அரசாங்கத்தின் இறக்குமதி கட்டுப்பாட்டுக் கொள்கை காரணமாக உள்ளூர் விவசாயம் செழிப்படைந்தது. அதனால் விவசாயிகள் அதிக வருமானம் ஈட்டினர். குறிப்பாக வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு, கரட், பீட்ருட்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

**நூறு சிந்தனை மலரட்டும்**

# உணவு உற்பத்தியில் தன்னிறைவு மிக அவசியம்

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியை ஆர்ப்பாட்டங்களால் தீர்க்க முடியாது. அதுபோலவே தற்போதைய அரசாங்கம் ராஜனாமா செய்வது, அமைச்சரவையை பல தடவை மாற்றுவது மற்றும் புதிய தேர்தல் என்பவற்றில் ஒன்றேனும் தீர்வுமாகாது. நாட்டுக்கு தற்போது தேவைப்படுவது ஒரு ஸ்திரமான அரசாங்கம். அதாவது நாட்டினை வழி நடத்த பலமான அரசியல் சக்தி இருந்தால் மாத்திரமே, நாட்டின் மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள முடியும். எனினும் மே 9ந் திகதி மகிந்த ராஜபக்ஷ தனது பிரதமர் பதவியைத் துறந்தார். அமைச்சரவை இரண்டாவது தடைவையாகக் கலைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியைச் சேர்ந்தவர்களால் கொழும்பு அலரிமாளிகையின் முன்னால் திரண்டிருந்த மற்றும் காலிமுகத்திடலில் முகாமிட்டிருந்த Gota go home அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்கப்பட்டனர். இத்தாக்குதலுகளுக்கு உடனடியாகவே பதிலடி கொடுக்கும் வகையில், கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தாக்குதல்காரர்களை வழிமறித்து தாக்கியும் மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளில் அரசதரப்பினருக்கு எதிராகவும் பாரிய வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இவையனைத்தும் எதேச்சையாக நிகழவில்லை. நீண்டகாலமாக மிகவும் நேர்த்தியாகத் திட்டமிட்டு அரங்கேற்பட்டுள்ளன என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது. அதாவது அரச தரப்பினரின் தாக்குதலை எதிர்பார்த்திருந்து, எதிர்த்தாக்குதல்கள் நேர்த்தியாக நடாத்தப்பட்டுள்ளன. இந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக நாடு தழுவி பாராளுமன்ற உறுப்பினரகள் உட்பட 2000 பேருக்கு மேற்பட்டவர்கள் கைதாகியுள்ளனரென இலங்கைப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இவ்வாறு கைதானவர்களின் விபரங்களினூடாக வன்முறைச் சம்பவங்களின் பின்னால் செயற்பட்டவர்கள் தொடர்பான விபரங்களும் முழுமையாகத் தெரியவந்துள்ளது.

வன்முறைச் சம்பவங்களில் பாராளுமன்ற உறுப்பினர் உட்பட 9 பேர் உயிரிழந்ததோடு, 600 இற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துமுள்ளனர். அத்துடன், பொதுச்சொத்துகள், வீடுகள் மற்றும் வாகனங்கள் மீதான 100 இற்கு மேற்பட்ட தீவைப்புச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. இந்த வன்முறைச் சம்பவங்கள் காரணமாக நாட்டுக்கும் மக்களுக்கும் மிக மோசமான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. நாட்டில் ஊரடங்கு பிறப்பிக்கபட்டது. இதனால் இலங்கையில் மீண்டுமொரு உள்நாட்டு யுத்தமொன்று தோன்றிவிடுமோ என்ற பரவலான அச்சம் பலரிடையே துளிர்த்திருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது.

மே 12ந் திகதி ஐ.தே.கட்சியைச் சேர்ந்த ரணில் விக்கிரமசிங்க புதிய பிரதமராகப் பதவியேற்றுள்ளபோதிலும் நிலைமைகளில் மாற்றமெதுவும் ஏற்படவில்லை. குற்றப் புலனாய்வுப்பிரிவினர் முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிலிருந்து காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் வரை பலரிடம் விசாரணைகளை முன்னெடுத்து வருகிறார்கள். இந்த விசாரணைகள் மூலம் அனைத்துக் குற்றவாளிகளும் கைதுசெய்யப்பட்டு தண்டனைகள் வழங்கப்படுமென உறுதியாகக் கூறிவிட முடியாது. இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து இடம்பெற்ற இனவன்செயல்கள், ஜே.வி.பி மற்றும் தமிழ் குழுக்களின் ஆயுத வன்முறைகள் மற்றும் அரச படைகளின் அத்துமீறல்கள் தொடர்பாக இலங்கையில் பல விசாரணைகள் நடைபெற்றன. எனினும், அவை சுமூகமான தீர்வைப்பெற்றுத் தரவில்லை.

1977 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் ஆட்சியிலிருந்த அரசாங்கங்களின் கீழ், ஏற்றுமதி, சுற்றுலாத்துறை மற்றும் வங்கிகள் மூலம் கிடைத்த வருமானத்தை விட, இறக்குமதிகளுக்காக ஏற்பட்ட செலவீனங்கள் அதிகமாக இருந்ததே இன்றைய பொருளாதாரம் பலவீனமடைந்து இருப்பதற்கான காரணம் ஆகும். இந்த இடைவெளியைப் பூர்த்தி செய்ய, நாங்கள் கடன் வாங்க வேண்ட நிர்ப்பந்திக்கப்பட்டோம். இதன் விளைவாக திருப்பிச் செலுத்த முடியாத கடனில் சிக்கிக்கொண்டோம். இக்கடன் தற்போது சுமார் 51 பில்லியன் அமெரிக்க டொலராக உள்ளது.

வெளிநாட்டுக் கடன்கள் அதிகரித்து, வெளிநாட்டு நிதி முதலீடுகள் வற்றிப் போகும் நிலையில், தமது அந்நியச் செலாவணி தேவையை சமாளிக்க, இலங்கை போன்ற வளரும் நாடுகள் IMF கடன்களை வாங்குகின்றன. IMF இன் நிபந்தனைகள், மூன்றாம் உலக நாடுகளின் வளங்களை சுரண்டுவதற்கும், பொருளாதாரத்தை உலக முதலாளிகளிடம் கையளிப்பதற்கும், அரசு வேலை வாய்ப்புகளைக் குறைப்பதற்கும், அரசின் அதிகாரத்தை மட்டுப்படுத்துவதற்குமே இட்டுச் செல்கின்றன. அத்துடன் கடன் சுமையிலிருந்து மீள்வதற்கு, மென்மேலும் கடன் வாங்குதல் என்பதும் தீர்வாகாது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை இராஜினாமா செய்ய வேண்டும் என்று கோரும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு இலங்கை நெருக்கடியின் உலகளாவிய இயக்கவியல் பற்றியதான அறிவு இல்லையென்பது தெரிகிறது. சிலவேளை ஆர்ப்பாட்டத்தை வழிநடத்தும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சக்திகள் அதனை அப்படியே வைத்திருக்கவும் விரும்பலாம். ஒரு மாற்றுத் தலைமையையோ அல்லது எதிர்காலத்திற்கான சாத்தியமான திட்டங்களினையோ ஆர்ப்பாட்டக்காரர்களினால் முன்வைக்க முடியவில்லை. இதனால் நாடு மிகவும் குழப்பம் நிறைந்து கொந்தளிப்பான அரசியல் முட்டுக்கட்டையில் சிக்கியுள்ளது போல் தோற்றமளிக்கின்றது. பொருளாதாரச் சுரண்டல் மற்றும் பூகோள அரசியல் கட்டுப்பாட்டை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புகளை பொருளாதார நெருக்கடிகள் வெளி சக்திகளுக்கு வழங்குகின்றன என்பதை ஆர்ப்பாட்டத்தை ஆதரிப்பவர்களும் உணரவில்லை.

இலங்கை தனது கடந்த 40 வருட கால அனுபவத்திலிருந்து புதிய பொருளாதாரக் கொள்கையொன்றினை வகுக்க வேண்டும். அக்கொள்கையானது, எப்படி அந்நியச்செலவாணியை அதிகளவில் ஈட்டுவது என்பதோடல்லாமல், இறக்குமதி பதிலீடுகளை உள்நாட்டில் உற்பத்தி செய்வது பற்றியதாகவும் இருக்க வேண்டும். இலங்கை, பிரதானமாக ஒரு விவசாய நாடாக இருப்பதால், விவசாயத்தின் அபிவிருத்திக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். இலங்கைக்கு கிடைக்கும் அந்நியச்செலவாணியில் அரைவாசி உணவு இறக்குமதிக்கு செலவிடப்படுகின்றது. எனவே உள்ளூரில் உற்பத்தி செய்யக்கூடிய உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து, உணவுப் பொருட்களுக்காக நாங்கள் இறக்குமதியில் சார்ந்திருப்பதை முடிந்தளவில் குறைக்க வேண்டும்.

***தொடர்பு மின்னஞ்சல் முகவரி:*** sunvaanavil@gmail.com

*'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.*

வானவில்

***இணையத்தளம்:*** http://manikkural.wordpress.com/ *இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.*

# இலங்கை நெருக்கடி வெளிப்படுத்தும் பாடம்

இலங்கை பொருளாதார நெருக்கடி பற்றிய தகவல்களும் உண்மைகளும் இப்போது நிறைய எழுதப்பட்டு வருகின்றன. அந்நாட்டில் அதிகரித்து வந்துள்ள வெளிநாட்டுக் கடன், மதிப்பு கூட்டு வரி சலுகைகளால் உருவான நிதி பற்றாக்குறை, உள்நாட்டுச் செலவுகளுக்காக வெளிநாடுகளிலிருந்து பெறப்பட்ட கடன்கள், பண மதிப்பில் ஏற்பட்ட சரிவு ஆகியவற்றோடு பெருந்தொற்றுக் காலத்தில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை பாதிப்பால் வெளிநாட்டு வருவாய் குறைந்தது.

இலங்கை பண மதிப்பு வீழ்ச்சியைத் தொடர்ந்து வெளிநாட்டு வாழ் இலங்கை மக்கள் அதிகாரப்பூர்வமான முறையில் இலங்கைக்கு பணத்தை அனுப்பாமல் மறைமுகமாக அனுப்பியதால் அந்நிய செலாவணி கையிருப்பு பற்றாக்குறை நிலையை எட்டியது. இதை சரி செய்வதற்காக இரசாயன உரங்களை இறக்குமதி செய்வதை கட்டுப்படுத்த எடுத்த நடவடிக்கை விவசாயத்தில், உணவு உற்பத்தியை கடுமையாக பாதித்தது. இவை உட்பட தொடர் பிரச்சனைகளால் தற்போது இலங்கை கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது.

### *பேராசிரியர் பிரபாத் பட்நாயக்* (Prabhat Patnaik)

தென்கிழக்கு ஆசியாவில் ஒரு 'மக்கள் நல அரசு' (welfare state) கோட்பாட்டின்கீழ் செயல்பட்ட இலங்கை ஒரு நோயாளி நாடாக சரிவை சந்தித்ததற்கு யார் பொறுப்பு? இக் கேள்விக்கு ராஜபக்சே அரசு தான் இதற்குப் பொறுப்பேற்க வேண்டும் என்று ஒவ்வொருவரும் ஒப்புக் கொள்கிற அதேவேளையில் குறிப்பாக அரசின் குற்றங்கள் எங்கே நிகழ்ந்தன என்பதில் பல கருத்து முரண்பாடுகள் உள்ளன.

அமெரிக்க நிறுவனங்களும் புதிய பனிப்போர் நாடுகளும் சீனாவுடன் மேற்கொண்ட பொருளாதார உறவுகளுமே நெருக்கடிக்கு காரணம் என்று இலங்கை அரசு மீது பலரும் குற்றம் சாட்டுகிறார்கள் (இது போன்றவற்றை இனி வரும் நாட்களில் அதிகமாக கேட்கலாம்). மற்றவர்கள் இலங்கையின் வெளிநாட்டு கடன் அதிகரித்து கொண்டு வரும்போது அரசாங்கம் தூங்கி விட்டது என்கிறார்கள். சில இந்திய விமர்சகர்கள் இலங்கையைப் போலவே இந்தியாவின்




சில மாநில அரசுகளும் சரிவை நோக்கிச் செல்கின்றன் அது போன்ற நெருக்கடி வருவதற்கு முன்பு சரி செய்ய வேண்டும் என்கிறார்கள். இந்த விபங்களைத் தருகிற அனைவருமே இலங்கையின் நெருக்கடிக்கு நவீன தாராளமயக் (neo-liberalism) கொள்கைகள் எந்த அளவுக்கு காரணம் என்பதைச் சொல்லாமல் தவிர்க்கிறார்கள்.

**நவீன தாராளமயத்தின் பங்கு**

இதைச் சொல்வதன் மூலம் நவீன தாராளமயத்தின் மந்திரத்தை திரும்பச் சொல்வதல்ல. நவதாராளமயத்தில் 'நல்ல காலங்களில்' கூட தொழிலாளர்களின் துன்ப துயரங்கள் தீவிரமடைந்தன. நவீன தாராளமய உற்பத்தி முறை சிறு பொருளாதார நாடுகளை பாதித்தன. அவர்களுடைய நல்ல நிலைமை அனைத்தும் ஒரு நொடிப் பொழுதில் தலைகீழாக மாறிவிடும். நவீன தாராளமயத்தில் கட்டவிழ்த்து விடப்பட்ட தற்செயலான நெருக்கடி என்றே நான் அதை சொல்வேன். இது நவீன தாராளமயத்தின் இயல்பான ஒன்று. இது உலக பொருளாதாரத்தையோ அல்லது அதன் பெரும்பகுதியையோ பாதிக்காது. சிற்சில நேரங்களில் அதில் சிக்கிக் கொள்ளும் குறிப்பிட்ட நாடுகளை மட்டுமே பாதிக்கிறது. இந்த அர்த்தத்தில் கிரீஸ் நெருக்கடியும் ஒரு தற்செயலான நெருக்கடியே. கிரீஸ் நாடு பெரும் வெளிநாட்டுக் கடனில் மூழ்கிக் கொண்டிருந்தபோது கடன் பிரச்சனை உடனடியாக முன்னுக்கு வரவில்லை. கடன் பிரச்சனை முன்னுக்கு வந்தபோது ஏற்கனவே அந்த நாடு திவாலான நிலைக்கு தள்ளப்பட்டு, கடன்களை தள்ளுபடி செய்யமுடியாத பொருளாதார நிலைமைக்கு தள்ளப்பட்டு இருந்தது. இவை அனைத்தும் விபத்து போல நடந்ததல்ல. இவை நவதாராளமய கொள்கைகளோடு பிணைக்கப்பட்ட ஒன்றாகும். ஏனெனில் கடன் வாங்குவதற்கு முன்பாக எவ்வளவு அதிகப்படியான கடன் தொகை வாங்கப்பட்டுள்ளது என்பதை திடீர் நெருக்கடிக்கு முன்பாக தெரிந்து கொள்ள வழியில்லாத நிலையில் இது எழுகிறது.

நெருக்கடி வருவதை முன்னரே அறிந்து கொண்டோம் என்று பல தளங்களில் இருந்து சிலர் வாதிடலாம். ஆனால் தேர்தல் ஜனநாயகத்தில் ஓர் அரசாங்கம் – ஏன், ஒரு பிற்போக்கு அரசாங்கம் கூட சிற்சில வரையறைகளுக்கு உட்பட்டுத்தான் செயல்பட முடியும். அதனால் அதனுடைய செலவுத் திட்டங்களை திரும்பப் பெறவோ அல்லது சேம நலத்திட்ட செலவுகளைக் குறைக்கவோ (அது வரையறுக்கப்பட்ட தொகையாக இருந்த போதும்) ஓய்வூதியர்களின் பென்சன்களை வெட்டவோ அல்லது பள்ளி கல்லூரிகளில் உள்ள ஆசிரியர்களின் சம்பளத்தை, மருத்துவமனைகளில் பணியாற்றும் மருத்துவர்களின் சம்பளத்தை வெட்டவோ முடியாது. மாறாக, அந்நிய செலாவணி கையிருப்பில் ஏற்படும் தற்காலிக பிரச்சனைகள் என்ன விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை பொருளாதார அனுபவத்திலிருந்து ஒரு அரசு உணர்ந்து கொள்ள முடியும். அதாவது, அந்நியக் கடன்கள் மூலம் ஏற்படும் பிரச்சனைகளை வெகு சுலபமாக கையாள முடியும் ஏனெனில் அதனால் உருவாகும் நெருக்கடியை சந்திக்க முடியும். அதற்கு மாறாக பொதுச் செலவுகளை வெட்டுவதன் மூலம் மக்களுக்கு துயரங்களை

உருவாக்கும் மேலும் நெருக்கடியை நோக்கித் தள்ளும்.

இப்படிச் சொல்வதன் மூலமாக ராஜபக்சே அரசை அவதூறுகளிலிருந்து விடுவிப்பது என்பதல்ல. மறைமுக வரியை வெட்டுவதால் நிதிப் பற்றாக்குறை அதிகரித்தது. ஆனால் அதை நேர்முக வரியை உயர்த்துவதன் மூலமாக சரிசெய்வது (பின்னர் செல்வ வரி உயர்த்தப்பட்டாலும் அதுவும் மிகக் குறைவானதே) இல்லையென்பதால் நெருக்கடி முற்றுவது தெளிவாகிறது. இலங்கை அரசின் தவறுகளை புறந்தள்ளிவிட முடியாது என்ற போதிலும், இலங்கை மக்களை நெருக்கடிக்கு உள்ளாக்கி அவர்கள் வீதிக்கு தள்ளப்பட்டுள்ள நிலைமைக்கு நவ தாராளமயத்தின் அடிப்படையான விதிகளே காரணம் என்பதைப் புறக்கணித்துவிட்டு மிக சுலபமாக கடந்து செல்லக்கூடாது.

**மக்கள் நல அரசு (எதிர்) தாராளமயம்**

இலங்கையின் தற்போதைய நெருக்கடியிலிருந்து இரண்டு தெளிவான பாடங்களை கற்றுகொள்ள வேண்டும். முதலாவது ஒரு பொது நல அரசானது நவதாராளமயத்துடன் போட்டியிட முடியாது என்பதாகும். இலங்கையானது மற்ற மூன்றாம் உலக நாடுகளைப் போலவே ஒரு பொதுநல அரசாக கடந்த காலத்தில் கட்டமைக்கப்பட்டது. நவதாராளமயமற்ற ஆட்சியின் போது சில பொதுநல அரசுகள் திடீரென அந்நியச் செலாவணி வருவாயில் சரிவை சந்திக்கும் அப்போதெல்லாம் அந்நியக் கடன்களை சார்ந்து நிற்காமல் சில அத்தியாவசியமற்ற இறக்குமதிகளை வெட்டிக் குறைத்து சரி செய்து கொண்டன. ஆனால் நவதாராளமயத்தின் கீழ் அரசுகள் செலவுகளை வெட்ட வேண்டும் அதன் விளைவாக அரசின் நல நடவடிக்கைகள் குறையும். இது பணப் புழக்கத்தை குறைத்து, பொருட்களுக்கான கிராக்கியில் வீழ்ச்சியை ஏற்படுத்தும். எனவே இறக்குமதி அல்லது அந்நிய கடன்கள் அதிகரிப்பதன் மூலமாக நலத்திட்ட நடவடிக்கைகள் உட்பட அரசின் செலவுகள் கூடுவதை சமாளிக்க வேண்டும். எவ்வாறாயினும் அந்நிய செலாவணி வருவாயில் சற்று கால தாமதம் ஏற்படுமானால் அதன் பிறகு மிக குறுகிய நேரத்திற்குள் கடன் நிபந்தனை கடுமையாகும். நாடு மேலும் கடன் பொறிக்குள் தள்ளப்படுவதோடு நலத்திட்ட நடவடிக்கைகள் தொடருவது நிச்சயமாக சாத்தியமற்றதாகி விடும்.

பல பொருளாதாரவாதிகளின் வாதத்திற்கு எதிரானதாக இது இருக்கும். அவர்களைப் பொறுத்தளவில், நவதாராளமயத்தின் கீழ் முதலீட்டாளர்களுக்கான நட்பான சூழலை உருவாக்குவதன் மூலம் அந்நிய மூல தனத்தை கவரமுடியும் மேலும் உள்நாட்டு முதலீடும் ஊக்கமடையும் இதன் மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதம் அதிகரிக்கும் அது அரசுகளின் பொதுநல நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மிக எளிதாக இருக்கும் என்று நம்புகிறார்கள். இந்த விவாதத்தில் இரு வெளிப்படையான தவறுகள் உள்ளன. முதலாவது பணக்காரர்களுக்கு ஏற்றவாறு வரியினை விதிக்காமல் உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதம் உயர்வதன் மூலமாக மட்டும் பொதுநல அரசை உருவாக்க முடியாது. மேலும் முதலீட்டாளர்களுக்கான சூழலை பாதுகாப்பதன் பெயரால் பணக்காரர்கள் மீது வரியை ஒருபோதும் உயர்த்த முடியாது. இது நலத்திட்டங்களுக்கான விரிவான செலவுகளை முறியடித்துவிடும்.

இரண்டாவதாக சற்று முன் விவாதித்தது போலவே, நவதாராளமய நாட்களுக்கு முன்பாக துவக்கப்பட்ட நலத்திட்டங்கள் நவ தாராளமய காலத்திலும் தொடருமானால் நவ தாராளமயத்திற்கும் பொதுநல அரசின் வாழ்வாதாரத்திற்கும் இடையே எந்த முரண்பாடும் இல்லை என்றே தோன்றுகிறது. ஆனால் ஒரு சிறு பொருளாதார அதிர்ச்சி ஏற்படுமானால் இதில் ஏதேனும் ஒன்றை உடனடியாக செயலிழக்கச் செய்து விடும்.

**'மாற்று' இல்லை என்றால் தப்பிக்க முடியாது**

நவதாராளமயத்தின் கீழ் ஏதாவது ஒருவகையில் தற்செயலான நெருக்கடிக்கு ஒவ்வொரு நாடும் பாதிக்கப்படுகிறது என்பது தான் இலங்கையின் அனுபவத்திலிருந்து கற்க வேண்டிய பாடம். நவதாராளமயத்தின் பிடியில் உள்ள ஒவ்வொரு நாட்டிலும் தற்போது இலங்கையில் நடந்து வரும் நிகழ்ச்சிப்போக்குகள் நிச்சயம் நடக்கும். நவதாராளமய ஆட்சிக்குள் பொது செலவீனங்களை வெட்டுவது மற்றும் பொதுநல அரசு நடவடிக்கைகளை குறைப்பதன் மூலமாக நெருக்கடியிலிருந்து வெளியேறுவது என்ற வழியில் மட்டுமல்ல் நவதாராளமயத்திலிருந்து மாநில அரசுகளும் கூட ஒட்டுமொத்தமாக வெளியேற வேண்டும் என பெரும்பாலான இந்திய விமர்சகர்கள் கோருகிறார்கள். உண்மையில் நவ தாராளமயத்திற்கு மாற்று இல்லாத நிலையில் அது அவ்வளவு எளிதாக இருக்காது. நவ தாராளமயத்தின் பிடியில் அந்த நாட்டை கொண்டு சென்றதாக இலங்கை அரசாங்கத்தை குற்றம் சாட்டலாம். ஆனால் அதைத் தவிர அரசாங்கத்திற்கு வேறு வழியில்லை. சர்வதேச நிதி மூலதனம் நாடுகளை நவ தாராளமயத்தினை கட்டாயமாக ஏற்க செய்கிறது.

(இக்கட்டுரை Peoples Democracy இல் வெளிவந்தது)

**தமிழில் : எஸ்.ஏ.மாணிக்கம்**

# ஒவ்வொரு 33 மணி நேரத்திற்கும் 10 இலட்சம் பேர் வறுமைக்கோட்டிற்கு கீழ் தள்ளப்படும் அவலம்

உலக அளவில் கொரோனா பெருந்தொற்றை தொடர்ந்து ஒவ்வொரு 33 மணிநேரத்திற்கும் 10 இலட்சம் பேர் வறுமைக்கோட்டிற்கு கீழ் தள்ளப்படும் அவலம் நிலவுவதாக அதிர்ச்சி தரும் ஆய்வு தகவல் வெளியாகி உள்ளது.

உலக பொருளாதார மன்றத்தின் வலியிலிருந்து இலாபம் என்ற தலைப்பில் ஒக்ஸ்பாம் இண்டர்நேஷனல் அமைப்பு ஆய்வறிக்கையை டாவோஸ் நகரில் நடந்த கூட்டத்தில் வெளியிட்டது. அதில் கொரோனா பெருந்தொற்று காரணமாக அத்தியாவசிய பொருட்களின் விலை 10 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு வேகமாக அதிகரித்ததன் விளைவாக உணவு, எரிபொருள் துறை ஒவ்வொரு 2 நாட்களிலும் 1 பில்லியன் அமெரிக்க டொலரை ஈட்டியது. கொரோனா பேரிடரை பயன்படுத்தி பெரும் பணக்காரர்கள் கொண்டாடி வரும் வேளையில் அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம் பல இலட்சம் மக்களின் வாழ்வாதாரத்திற்கு போராடி வருகின்றனர்.

கொரோனா காலங்களில் மட்டும் உலகளவில் 573 பேர் 100 கோடி


**தொடர்ச்சி 6ம் பக்கம் பார்க்க...**

# சிக்காகோ வீதிகளில் சிந்திய இரத்தம்...

இருபத்தியோராம் நூற்றாண்டின் முதல் கால் பகுதியின் இறுதி சமயத்தில் – நவீன தாராளமய உலகமய யுகத்தில் உழைப்பாளி மக்களின் பணிநிலை, வாழ்நிலை, சமூக, பொருளாதார, அரசியல் நிலை குறிப்பிட்டுச் சொல்லும்படியாக இல்லை எனும் போது, பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி கால்பகுதி காலக்கட்டத்தில் எத்தகைய மோசமான நிலையில் இருந்திருக்கும் என்பதை நினைத்தால் இளகிய மனதுடையவர்களின் இதய ஓட்டமே நின்றுவிடும். பன்னாட்டு கார்ப்பரேட் பெருநிறுவனங்களின் உலகளாவிய சுரண்டல், மூலதனக் குவியல் தொழிலாளர்க ளின் சாறைப் பிழிந்து சக்கையாக்கிடவும் பெருமுதலாளிகளின் லாபத்தையும் உபரியையும் மென்மேலும் அதிகமாக்கவும், ஏற்கெனவே இருந்த தொழிலாளர் நலச் சட்டங்களை எல்லாம் சிதைத்துச் சீரழித்து சின்னா பின்னமாக்கி வைத்திருக்கும் நிலை உழைப்பாளி மக்களை உருக்குலையச் செய்திட முயல்கிறது. ஆயினும் அதற்கெதிரான போராட்டங்களை முன்னெடுக்கவும் முயற்சிக்கவும் வெற்றிபெறவும் தொழிலாளி வர்க்கம் தொடர்ந்து சமர்க்களத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது தீரமுடன்.

முதலாம் உலகப்போருக்கு முந்தைய முப்பது ஆண்டுகளில் தொழிலாளி வர்க்கம் தனது பணி நிலைமை, வாழ்நிலைமை மேம்பாட்டுக்காக குரல் கொடுத்து ஒன்றுபட்டுப் போராடும் சூழல் ஏற்பட்டது. அதாவது பத்தொன்பதாம் நூற்றாண்டின் நான்காம் கால்பகுதியில் தொழிலாளர்கள் மத்தியில் கொந்தளிப்பு ஏற்பட்டது. நிலப்பிரபுத்துவக் காலத்தைப் போல சூரியன் உதிக்கும் முன்னே வேலைக்குப் புறப்படுவதும் சூரியன் அஸ்தமித்த பின்னேயும் கூட நேரம் கழித்து வீட்டுக்குத் திரும்புவதுமான நிலைமையே தொழிலாளர்களுக்கு கதியாக இருந்தது. தொழிற்புரட்சி ஏற்பட்டு நிதி மூலதனம் சுரண்டலை அதிகப்படுத்தி செல்வத்தைக் குவிப்பதிலேயே குறியாக இருந்தது. ஆண்கள் மட்டுமின்றி பெண்களும் குழந்தைகளும் கூட கசக்கிப் பிழியப்பட்டார்கள்.

10 மணி, 12 மணி, 14 மணி நேரம் கூட வேலை வாங்கப்பட்டனர்.




உண்ணவும் உறங்கவும் அவர்களுக்கு நேரமின்றியும் இடமின்றியும் தொழுவத்தில் துயரப்படும் விலங்குகள் போல் துன்பப்பட்டார்கள். பொழுது போக்குவதற்கோ, மருத்துவம் செய்து கொள்வதற்கோ கூட அனுமதிக்கப்படாத நிலை. கர்ப்பிணிப் பெண்கள் தொழிற்சாலைகளிலேயே பிரசவம் ஆகிடும் கொடும் பாதகமான சூழ்நிலைதான் அவர்களுக்கு வாய்த்தது. உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருந்தவர்களிடம் உழைப்பைச் சுரண்டிக் கொழுத்த ார்கள் முதலாளிகள். இங்கிலாந்தின் புதிய காலனியான அமெரிக்காவில் அடிமை வியாபாரமும் நடந்ததால் அவர்களை விலைக்கு வாங்கியவர்கள், இன்றைய கேம்ப் கூலிகள் போல் வேலை வாங்கப்பட்டார்கள். பின்னர் அமெரிக்காவின் தென்பகுதியில் அடிமைகள் ஒழிப்புச் சட்டம் நிறைவேறினாலும் கூட தொழிலாளர்கள் நிலைமையில் பெரிதாக மாற்றம் ஏதும் ஏற்படவில்லை. ஆனாலும் ஆங்காங்கே மாற்றத்துக்கான வெளிச்சக் கீற்றுகள் தென்படவே செய்தன. இந்த காலக்கட்டத்தில்தான் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி யில் 1848இல் மார்க்ஸ் – ஏங்கெல்ஸ் கம்யூனிஸ்ட் அறிக்கையை வெளியிட்டார்கள். வேலை நேரத்தை குறைக்க வேண்டும் என்பதுள்ளிட்ட கோரிக்கைகள் தொழிலாளர்கள் மத்தியில் எழலாயின. அதையடுத்து ஆங்காங்கே உலகின் பல பகுதிகளிலும் குறிப்பாக முதலாளித்துவ வளர்ச்சி ஏற்பட்டுக் கொண்டிருந்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்குட்பட்ட ஆஸ்திரேலியா முதல் அமெரிக்கா வரை எட்டுமணி நேர வேலை உள்ளிட்ட கோரிக்கைகளுக்காக சிறிதும் பெரிதுமாக போராட்டங்கள் நடக்கத் துவங்கின.

**ப.முருகன்**

1886ஆம் ஆண்டில் அமெரிக்காவில் வேலை நிறுத்தமும் போராட்டமும் நடந்தன என்றால் அதற்கு முன்னதாக 1862இல் இந்தியாவில் நடந்தது. 1856இல் ஹவுரா ரயில்நிலையத் தொழிலாளர்கள் 1200 பேர் 8 மணி நேர வேலைக்காக வேலைநிறுத்தம் செய்தனர். அதற்கும் முன்பு 1856இல் ஏப்ரல் 1 அன்று ஆஸ்திரேலியாவில் நடந்த தொழிலாளர் போராட்டம் தான் உலகின் முதல் போராட்டம் என்று ரோசா லக்சம்பர்க் குறிப்பிட்டுள்ளார் என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. முதலாளித்துவத்துக்கு ஆதரவான அரசின் அடக்குமுறையை எதிர்த்த

போராட்டம் இப்படித்தான் துவங்கியது. ஆயினும் ரத்தம் சிந்தி உயிரைத் தந்து முத்திரை பதித்தது சிகாகோ நகரத் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டம் தான். 8 மணி நேர வேலைக்காக உலகின் பல பகுதிகளிலும் போராட்டங்கள் வெடித்துக் கிளம்பியதை, மாமேதை காரல் மார்க்ஸ் தனது மூலதனம் நூலில், "எட்டு மணி நேர வேலை நாள் என்ற இந்த இயக்கம் அட்லாண்டிக்கிலிருந்து பசிபிக்கிற்கும் புதிய இங்கிலாந்திலிருந்து கலிபோர்னியாவிற்கும் மிக வேகமாகப் பரவிக் கொண்டிருக்கிறது" என்று மகிழ்வோடு குறிப்பிட்டி ருக்கிறார்.

ஆயினும் 1883இல் மறைந்துவிட்டார் மார்க்ஸ். அதன் பிறகு தான், அமெரிக்காவில் 8 மணி நேர வேலைக்காக நியூயார்க் உள்ளிட்ட நகரங்களில் உணர்ச்சிமிகு போராட்டங்கள் நடந்தன. 1886 ஏப்ரல் 25 முதல் மே 4 வரை 19 போராட்டங்கள் நடந்தன என்று முதலாளித்துவ ஏடுகள் தெரிவித்தன. அதில் சிகாகோ நகரில் மே 1 அன்று நடந்த போராட்டத்தில் 35 ஆயிரம் பேர் கலந்து கொண்டதாகவும் குறிப்பிட்டன. மே 3, 4 தேதி களில் நடந்த போராட்டங்களில் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்து பேரணியில் கலந்து கொண்டனர். இந்த எழுச்சியை அடக்கவும் ஒடுக்கவும் அமெரிக்கக் காவல்துறை 12 முறை வன்முறையை ஏவியது. 3 முறை துப்பாக்கிச்சூடு நடத்தியது. மே 3இல் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 2 பேர் உயிரிழந்ததாக அவர்களது தகவல் தெரிவித்தது. மே 4 அன்று ஹே – மார்க்கெட்டில் நடந்த துப்பாக்கிச்சூட்டில் 8 பேர் உயிர்ப்பலி யானதாக கூறினர். ஆனால் உண்மையில் பலி எண்ணிக்கை அதிகம். அமைதியாக நடந்த பேரணி பொதுக் கூட்டத்தில் இருந்து காவல்துறை மீது வெடி குண்டு வீசியதாகக் கூறியே துப்பாக்கிச்சூட்டை நடத்தினர் சதிகாரர்கள்.

அந்த பொய்க்காரணத்தைக் கூறியே நூற்றுக்கும் மேற்பட்டோரை கைது செய்து வழக்கு தொடுத்தனர். அந்த வழக்கில்தான் தொழிலாளர் தலைவர்களில் 7 பேருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. வழக்கை விசாரித்த ஜூரிகள் 12 பேரும் ஒரே கருத்தைக் கூறி தங்கள் முதலாளித்துவ விசுவாசத்தையும் முக விலாசத்தையும் வெளிப்படுத்தினர். ஏனெனில் அவர்கள் மீதான குற்றம் உண்மையில் நிரூபிக்கப்படவில்லை. தூக்கிலிடப்பட்ட தீரர்கள் 4 பேரின் குரல்வளை நெரிக்கப்பட்டது. ஆனால் அவர்களின் முழக்கம் ஒலிப்பதைத் தடுக்க முடியவில்லை. அது வரலாற்றில் நிலைத்தது. அந்த வழக்கு அமெரிக்க வரலாற்றிலேயே மோசமானதாக அமைந்தது. ஆனால் அந்தத் தீரமிக்க, ஆவேசத் தீ கொழுந்துவிட்டெரிந்த போராட்டத்தால் தான் 8 மணி நேர வேலை நாள் அமலானது. தொழிலாளி வர்க்கம் வெற்றி பெற்றது. இந்த ஹே~ மார்க்கெட் தியாகிகளுக்கு 1893ஆம் ஆண்டில் வால்டுஹைம் கல்லறையில் நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டது. அது இன்னும் மே தினத் தியாகிகளின் தீரத்தைப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. ஆனால் அமெரிக்க ஆட்சியாளர்கள் போராட்டத்தினால் உயிரிழந்தவர் என்று கூறி ஒரு காவல் அதிகாரிக்கு ஹே~மார்க்கெட்டில் 1889திலேயே சிலை வைத்தனர். ஆனால் ஒரு மாணவ தீவிரவாதியால் 1969இல் சேதப்படுத்தப்பட்டதால் 1970இல் காவல்துறையாலேயே அது அகற்றப்பட்டது.

சிக்காகோ எழுச்சியையடுத்து 1889 ஜூலை 14இல் பாரீஸ் நகரில் ஏங்கெல்ஸ் தலைமையில் கூடிய இரண்டாவது கம்யூனிஸ்ட் அகிலம் அமெரிக்கத் தொழிலாளர்களின் தீரத்தைப் பாராட்டியது. 1890 மே 1ஆம் தேதியை 8 மணி நேர வேலைநாள் கோரிக்கை தினமாகவும் சர்வதேச தொழிலாளர்களின் உரிமை தினமாகவும் சிகாகோ தியாகிகளின் நினைவஞ்சலி தினமாகவும் கடைப்பிடிக்குமாறு அறைகூவல் விடுத்தது. அதன் படியே உலகம் முழுவதும் மே முதல் நாள் உழைக்கும் மக்களின் உரிமை தினமாகக் கொண்டாடப்படுகிறது. ரஷ்யாவில் புரட்சி நடந்து தொழிலாளி வர்க்க ஆட்சி அமைந்ததும் பல்வேறு நாடுகளில் சோசலிச அரசுகள் உருவானதும் உலகின் பெரும்பகுதி நாடுகளில் மே 1 விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டது. நமது இந்தியாவில் 1957 இல் கேரளத்தில் இ.எம்.எஸ். நம்பூதிரிபாட் தலைமையில் அமைந்த கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி மே தினத்துக்கு முதன்முதலாக விடுமுறை வழங்கியது. 1967இல் மேற்குவங்கத்தில் ஜோதிபாசு துணை முதல்வராக இருந்த அரசு மே தின விடுமுறையை நடைமுறைப்படுத்தியது. 1970 இல் தமிழகத்தில் இருந்த கலைஞர் கருணாநிதி தலைமையிலான திமுக அரசு, மே தினத்துக்கு விடுமுறையை அளித்தது. ஆயினும் நாடு தழுவிய அளவில் 1990இல் தான் வி.பி.சிங் தலைமையிலான அரசு, இடதுசாரிகள் ஆதரவுடன் நடந்த ஆட்சியின் போது மே தினத்தை விடுமுறை தினமாக அறிவித்தது. சரியாக நூறாண்டுக்குப் பிறகு இந்தியாவில் மே தின விடுமுறை ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்டது.

ஆனால் இன்றைய காவி கார்ப்பரேட் ஆதரவு மோடி ஆட்சியில் தொழிலாளர் நலச் சட்டங்கள் எல்லாம் ஒழித்துக் கட்டப்பட்டுள்ள நிலையில், அரசுத் துறைகளிலேயே ஒப்பந்தத் தொழிலாளர் முறை அதிகரிக்கும் நிலையில் சொல்லப்போனால் அரசுத் துறைகள் எல்லாம் தனியாருக்குத் தாரை வார்க்கப்படும் நிலையில் 8 மணி நேர வேலை நாள் என்பது மிகுந்த முக்கியத்துவம் உடையதாகிறது. ஏனெனில் கொரோனா தொற்றைக் காரணம் காட்டி தனியார் தொழிற்சாலைகள் பெரும்பாலும் 10 மணி நேரம், 12 மணி நேரம் என வேலை நேரத்தை அதிகரித்துள்ள சூழ்நிலையில் இந்த மே தினம் இன்னும் அதிக அர்த்தமுடையதாகிறது. வாழ்க மே தினம்!

---

**4ம் பக்கத்தொடர்ச்சி...**

டொலருக்கு மேல் சொத்து சேர்த்துள்ளனர். அதே சமயம் 26 கோடியே 30 இலட்சம் பேர் வறுமைக்கோட்டிற்கு கீழ் தள்ளப்பட்டுள்ளனர். ஒவ்வொரு 30 மணி நேரத்திற்கும் ஒரு பெரும் பணக்காரர் உருவாகும் சூழலில் ஒவ்வொரு 33 மணி நேரத்திற்கும் 10 இலட்சம் பேர் வறுமைக்கோட்டிற்கு கீழ் தள்ளப்படுகின்றனர்.

உலகளவில் பெரும் பணக்காரர்களின் சொத்து மதிப்பு சர்வதேச பொருளாதார வளர்ச்சியில் 13.9 சதவிகிதம் உள்ளது. இது கடந்த 2000 ஆம் ஆண்டை விட 4.4 சதவிகிதம் அதிகம் ஆகும். குறைவான சம்பளத்திற்கு பணியாற்றுபவர்கள் இன்னும் கடுமையாக வேலை செய்து கொண்டிருக்கும் சூழல் நிலவுகிறதென ஒக்ஸ்பாம் ஆய்வறிக்கை தெரிவித்துள்ளது.

# சேதனப் பயிர்ச்செய்கை மூலம் அனைவருக்கும் நஞ்சற்ற உணவு



**கலாநிதி சி.ஜே.அரசகேசரி**

**சே**தனப்பயிர்ச்செய்கை சமகாலத்தின் அத்தியாவசியத் தேவையாகியுள்ளது. பயனுள்ள தரவுகளைப் பயன்படுத்தி வீட்டுத்தோட்டங்களையோ அல்லது ஒருங்கிணைந்த பண்ணைமுறைகளையோ மேற்கொள்ள விவசாயிகள் முன்வரவேண்டும். கணிசமான விளைச்சலின் குறைவு உற்பத்திப்பொருளின் விலை உயர்வு என்பன எதிர்பார்க்கப்பட்டுள்ள சவாலாக இருப்பினும், வளங்கள் உள்ள எமது நாட்டிலும் தற்போது உலகில் 187 நாடுகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் இம்முறையைப்பயன்படுத்தி நாமும் முனைப்புடன் செயற்பட்டு எம்மவர்க்கு தேவையான நஞ்சற்ற உணவு உற்பத்திகளை செய்து வழங்கும் பொறுப்பு சம்பந்தப்பட்ட அனைவரையுமே சார்ந்தது முனைப்புடன் செயற்படுவோம் முயற்சியில் வெற்றிபெறுவோம் என்கிறார் பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் மேலதிகப்பணிப்பாளர் (ஆராய்ச்சி) விவசாய விஞ்ஞானி கலாநிதி சி.ஜே.அரசகேசரி

**கேள்வி:** சேதன விவசாயம் பற்றி குறிப்பிடுங்கள்?

**பதில்:** சேதனவிவசாயம் என்பது உயிரியல் தொகுதியை அடிப்படையாகக் கொண்டது. மனிதன் விலங்குகள் தாவரங்கள் நுண்ணங்கிகள் மற்றும் பறவை இனங்கள் என்பன ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்து வாழும். சூழல் தொகுதியொன்றில் உணவு உற்பத்தி என்பது நிலைபேறாக அமையவேண்டும். அத்துடன் போதுமானதாகவும் நஞ்சூட்டமற்றதாகவும் ஆரோக்கியமுள்ள உணவாகவும் இவ் உணவு உற்பத்தி அமைதல் கட்டாயமானதாகும். பண்டையகாலத்தில் இருந்து சமநிலை பேணப்பட்டே வந்திருக்கின்றது. அதிகரித்த உணவுத்தேவையை ஈடுசெய்யும் பொருட்டு நிர்ப்பந்திக்கப்பட்ட விஞ்ஞான உலகம் அசேதன பசளைகள் கிருமிநாசினிகள் போன்றவற்றை அறிமுகமாக்கியது. அத்துடன் அதிகரித்த சனத்தொகையின் தேவைகளை நிவர்த்திசெய்யும் பொருட்டு பசுமைப்புரட்சி நடந்தேறியது. இதனடிப்படையில் கூடிய விளைவைத்தரும் புதிய இனங்களும் வீரிய வர்க்கங்களும் அறிமுகமாகின. விவசாயிகளிற்கும் இவ் அசேதன உரப்பாவனை அதிக இலாபமீட்டியமையால் விவசாயம் வியாபாரமாக உருவெடுத்தது.

ஆனால் அதிகரித்த உரப்பாவனை மற்றும் நஞ்சுள்ள கிருமிகொல்லிகள் சூழலை மாசாக்கியதுடன் மனிதசுகாதாரத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது. பரிந்துரைக்கப்பட்ட அளவைவிட அதிகளவிலான உரப்பாவனை மற்றும் வரையறையற்ற பீடைநாசினிப்பாவனை என்பனவே இக்குழப்பத்திற்கு காரணமாயின. உதாரணமாக நீருடன் கலந்துள்ள அதிகளவு நைதரசன் நீலப்பிள்ளைகள் பிறப்பதை அதிகரிக்கிறது. விஞ்ஞானரீதியாக உறுதிசெய்யப்படாதவிடத்தும் அதிகளவு களைநாசினி பாவிக்கப்பட்ட இடங்களிலையே சிறுநீரக நோய் அதிகளவில் பதியப்பட்டுள்ளது. இவ்வாறு இருக்கையில் விவசாயத்தை உயிருள்ள ஒரு தொகுதியாகக் கருதி சூழலுடன் இசைவானமுறையில் இயற்கையாகக்கிடைக்கும் உள்ளீடுகளை காத்திரகரமான முறைகளில் பயன்படுத்தி விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் பயனளிக்கக்கூடிய உற்பத்திகளை மேற்கொள்வதற்கான ஒன்றிணைந்த பயிர்ச்செய்கை முறையே சேதனப்பயிர்ச்செய்கையாக வரையறுக்கப்பட்டுள்ளது.

எம்மவர் தொன்றுதொட்டு இப்பயிர்ச்செய்கையை மேற்கொண்டிருந்தாலும் இங்கிலாந்தில் கேம்பிறிச் பல்கலைக்கழகத்தில் கல்விபயின்ற சேர் அல்பாட் ஹொவார்ட் என்பவரே நவீன சேதன விவசாயத்தின் தந்தை என அங்கீகரிக்கப்பட்டுள்ளார். இச்சூழலுடன் இசைவான விவசாயத்தை *1940* ஆம் ஆண்டளவில் நோர்வான் என்பவர் சேதனவிவசாயம் என பெயரிட்டுள்ளார்.

**கேள்வி:** சேதன விவசாய பயிர்ச்செய்கையின் முக்கியத்துவம் பற்றி சொல்லுங்கள்?

**பதில்:** சாதாரண விவசாயத்தைப்போன்றே உணவைப் பெற்றுக்கொள்வதுதான் இம்முறையிலும் பிரதான நோக்கமாக அமையும். இம்முயற்சியின் போது எம் சுற்று சூழலையும் நாம் வாழும் சுற்றாடலையும் மாசுறாமல் பாதுகாத்தலிலும் மிகமுக்கியபங்கு வகிக்கின்றது. அத்துடன் எவ்வளவுக்கு எவ்வளவு எம்முடன் இணைந்து செயலாற்றவிரும்பும் நாம் இருக்கும் பூமியின் மண்ணானது நிலைபேறான வளம் ஒன்றை தக்க வைத்துக் கொள்ளவேண்டும் என்பது சேதனப்பயிர்ச்செய்கையில் மிகமுக்கியமாக கருதப்படுகின்றது. சேதன உரங்களின் பாவனை மண்ணின் போசணை வளத்தை மேம்படுத்தும். அத்துடன் மண்ணிலிருந்து கிடைக்கக்கூடிய அவசியமான மூலங்களை இலகுவில் அகத்துறிஞ்சக்கூடிய வடிவில் தொடர்ந்தேச்சையாக வழங்கும்.

மட்டுமல்லாது நுண்ணங்கிகள் மண்புழு மற்றும் ஏனைய பயன்தரும் உயிரினங்கள் வாழக்கூடிய பொருத்தமான கட்டமைப்பொன்றை இச்சேதனப்பொருட்களின் பாவனை உருவாக்கிவிடுகின்றது. இதனால் மேற்போந்த உயிரினங்களின் தொழிற்பாடு அதிகரிப்பதனால் தாவரங்களின் வளர்ச்சிக்கு சாதகமான சூழல் ஒன்று உருவாகுகின்றது. மண்ணிற்கு இடப்படும் சேதனப்பசளைகள் பிரிகையடைந்து மண்ணின் மூலக்கூறுகளை ஒருவகையில் ஒன்றுசேர்ப்பதனால் மண்ணரிப்பு குறைக்கப்படுகின்றது. அநேக உக்கும் பதார்த்தங்கள் உக்கலடைவதனால் இவ்வளமான மண்ணின் நீர்ப்பிடிப்பும் அதிகரிக்கும். ஆக சேதனப்பயிர்ச்செய்கையின் நடவடிக்கைகள் உயிரினங்களுக்கு மட்டுமல்ல மண்ணிற்கும் ஒரு பேண்தகு நிலைமையை உருவாக்குகின்றது.

**கேள்வி:** சேதன விவசாய பயிர்ச்செய்கைக்குரிய வழிமுறைகள் என்ன?

**பதில்:** சேதனமுறையில் உணவு உற்பத்தியில் ஈடுபடும் எவரும் ஓர் ஒன்றிணைந்த பண்ணைமுறையையே பேணிப்பாதுகாக்க வேண்டும். இவ்வகையில் பொருத்தமான சேதனத்திற்கு இசைவாக்கமடைந்துள்ள பயிர்வகைகள் மற்றும் விலங்குவேளாண்மை கால்நடை வளர்ப்பு என்பன இதிலடங்கும். விலங்குவேளாண்மை கால்நடைவளர்ப்பு என்பவற்றில் கூட்டெருப்பசளை தயாரிக்கமுடியும். இப்பொறிமுறையில் கால்நடைக்கு தேவையான இலைகுழைகளை உருவாக்ககூடிய மரம் மற்றும் செடி கொடிகளில் இருந்தும் பசுந்தாட்பசளை உருவாக்கலாம். அத்துடன் அவரை இனப்பயிர் ஒன்றை சுழற்சிமுறையில் பயிரிடுவதனால் வளிமண்டல நைதரசனை மண்ணிற்கு பதிக்கும் பொறிமுறையும் நிறைவேறுகின்றது.

**கேள்வி:** பசுந்தாட்பசளைகளும் அவற்றின் பயன்களும் என்னென்ன?

**பதில்:** பசுந்தாட்பசளை எனும் போது பச்சையாகவே மண்ணிற்கு சேர்க்கக்கூடிய முழுத்தாவரமோ பயிர்களின் மீதிகளோ இலைகுழைகளோ உள்ளடங்கும். பயிரிடப்போகும் நிலப்பரப்பில் பசுந்தாட்பயிர்களை வளர்த்து உரியமுறையில் உக்கக்கூடிய பருவத்தில் மண்ணினுள் தாழ்ப்பது பிரயோசமானது. உதாரணமாக சணல்பயிரை நெருக்கமாக விதைத்து பூக்கும் காலத்தில் மண்ணிற்குள் சேர்த்து விடுவதனால் பாரியளவில் மண்வளம் அதிகரிக்கும். இது களைகளையும் கட்டுப்படுத்துகின்றது. அத்துடன் பூவரசு, வேம்பு, அகத்தி மற்றும் காட்டுச்சூரியகாந்தி என்பனவும் இப்பசுந்தாட்பசளையினுள் அடங்கும். இம்மரங்களின் இலைகுழைகள் மண்ணினுள் அதர் எடுத்து தாழ்க்கப்படும்.

அசோலா எனப்படும் நீர்ப்பன்னம் மிகக்குறுகிய காலத்தில் அதிகளவில் பெருகக்கூடியது. அண்ணளவாக ஒரு மீற்றர் சதுரபரப்பில் 5 கிலோகிராமை ஒரு வாரத்தில் பெற்றுக்கொள்ளமுடியும். இப்பன்னத்தில் இலைகள் வளிமண்டல நைதரசனை பதிக்கக்கூடியவை. சிறிய நீர்த்தொட்டிகளில் முடிந்தளவு நிலப்பரப்பில் வளரக்கூடிய இத்தாவரத்தின் வளர்ச்சியை அத்தொட்டிகளின் அடிகளில் பச்சை சாணத்தை கரைத்துவிடுவதன் மூலம் அதிகரிக்கலாம். கால்நடைவளர்ப்பிற்கும் அவ் அசோலாவை நாளாந்த உணவாக்கலாம். அத்துடன் இவ் அசோலாவை அரைத்து நீரில் சாறாக்கி தாவரங்களிற்கு விசுறுவதனால் பயனுள்ள பசளையாகவும் ஆக்கமுடியும். அத்துடன் கூட்டெரு தயாரிப்பில் இத்தாவரம் பயன்படுத்தப்படுவதனால் கூட்டெரு விரைவாக உக்கி அதிக போசணை உள்ளதாக மாறும்.

**உயிரியற் பசளை**

அசோஸ் பயிர் இல்லம் அசற்றோ பக்டர் போன்றன பயனுள்ள நுண்ணுயிர் பசளைகளாகும். இவற்றை பயன்படுத்துவதனால் கிடைக்கக்கூடிய நைதரசன் அளவு அதிகரிக்கும். கிராமங்கள் சுற்றயல்கள் மற்றும் நகரம் போன்ற இடங்களில் உள்ள தாவர விலங்கு கழிவுகள் குடியிருப்புக்கழிவுகள் என்பவற்றை சரியானமுறையில் வெவ்வேறாக சேர்த்து குழிவுமுறையிலோ அல்லது குவிவுமுறையிலோ ஒன்றாக சேர்த்து மூன்று மாதங்களிற்கு படியவிடும்போது தரமான கூட்டுப்பசளை உருவாகும். வீட்டுத்தோட்டங்களிற்கு இது மிகவும் பொருத்தமானதாகும். பாரிய அளவில் கூட்டுப்பசளை உற்பத்தி செய்யவிரும்புவோர் சரியான முறையில் கழிவுகளை சேகரித்து ஏற்றவகையில் தயாரிக்கலாம். இக்கூட்டுப்பசளை தயாரிப்பவர்கள் பெரியளவில் உள்ள தாவர இலைகள் ஓலைகள் பனையோலை வாழைத்தண்டு போன்றவற்றை சிறுசிறுதுண்டுகளாக்க தற்போது கருவி ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இக்கருவியைப் பயன்படுத்தி சிறுசிறு துண்டாக்கும் தாவர கழிவுகளை இலகுவில் உக்க வைக்கலாம். கூட்டுப்பசளை தயாரிக்கும் போது வீட்டுத்தோட்டங்களிற்கோ அல்லது சிறிய பாவனைகளிற்கோ சுயமாக தயாரிப்பவர்கள் எதுவித சான்றுகளும் இல்லாமல் பயன்படுத்தமுடியும். ஆனால் விற்பனைக்கு தயார்படுத்தும் கூட்டுப்பசளை உற்பத்தியானது சான்றிதழை பெறவேண்டியுள்ளது. பசளை மாதிரி ஒன்றினுள்ள ஈரப்பதன் மண்ணின் அளவு மற்றும் பிரதான மூலகங்களாகிய நைதரசன் பொசுபரசு பொட்டாசு போன்றவையும் ஏனைய நுண் மூலங்களும் அளவிடப்பட்டு அதற்குரிய சான்றிதழ் வழங்கப்படும். எனவே கூட்டுப்பசளை தயாரிப்போர் இவ்வாறான விடயங்களில் கவனம் செலுத்துவது நல்லது. இவ்வகைச்சான்றிதழ்களை மாகாந்துறையில் அமைந்துள்ள தேசிய பேண்தகு விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் வழங்கும்.

உள்ளூரில் பயன்படுத்தப்படும் கூட்டுப்பசளையின் தரம் மேலே குறிப்பிடப்பட்டுள்ளது. பாரிய அளவில் இக்கூட்டுப்பசளை விவசாயிகளுக்கு தேவைப்படுவதனால் அரசாங்கம் எதிர்வரும் காலபோகத்திற்கு பிரதானமாக பெருமளவு கூட்டுப்பசளைகளை இறக்குமதி செய்ய தயாராகுகின்றது. உள்ளூர் உற்பத்திகளை அதிகரிக்கும் பொறிமுறைகள் கமநலசேவைகள் திணைக்களங்கள் மூலம் முடுக்கிவிடப்பட்டுள்ளதால் ஓரிரு வருடங்களில் பாரியளவில் தற்போது இறக்குமதி செய்யப்படவுள்ள அசேதன உரங்களின் இறக்குமதியானது கணிசமானளவு குறையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**கேள்வி:** சேதனப் பயிர்செய்கையில் நோய்ப்பீடைக் கட்டுப்பாடு பற்றி விவசாயிகளுக்கு தெளிவுப்படுத்துங்கள்?

**பதில்:** வீட்டுத்தோட்டங்களில் நோய்ப்பீடைகள் பாரிய அளவு சேதத்தை ஏற்படுத்தாது கைகளால் பொறுக்கி அழித்தோ ஒளிப்பொறி வைத்தோ அல்லது சாம்பல் என்பவற்றை பயன்படுத்தியோ கட்டுப்படுத்திவிடமுடியும். இரசாயனங்களைப் போலல்லாது சேதனமுறையில் பயிர்செய்யப்படுமிடத்து நோய்ப்பீடைகளை சற்று வேறுபட்ட

விதத்தில் அணுகவேண்டும். சேதன மற்றும் தாவர பீடைக்கொல்லிகள் அதிகம் செறிவற்றது. இதனால் பீடைகள் வந்தபின் அழித்தல் என்பது மிகப்பெரிய சவாலாக அமையும். எனவே வருமுன் காப்பதே சிறந்தவழியாகும். இதன்பொருட்டு எதிர்ப்பினங்களை பயிரிடல் உரிய காலத்தில் பயிரிடல் சரியான பயிராக்கவியல் வழிமுறைகளைக் கையாளல் பயிர் இடைவெளிகளை சரிசெய்தல் குறுகியகால நோய்ப்பீடைகளை எதிர்க்கக்கூடிய இனங்களைப்பயிரிடல் போன்றன வருமுன் காத்தலில் பங்குவகிக்கின்றன.

களைகள் கட்டுப்படுத்துவது உண்மையில் சவாலாகவே அமையும். விசேடமாக நெல்வயல்களில் இது மிகவும் சவாலாக அமையக்கூடும். இருப்பினும் அறுவடைக்குப் பிந்திய வைக்கோலோடு சேர்த்து வயலை உழுதுவிடல் உழவுக்கு முன்னரே ஓரளவு நீர்பாய்ச்சுதல் மற்றும் அவ்வவ்போது கிடைக்கும் மழையைப்பயன்படுத்தி உழுது பண்படுத்தல் மூலம் நெல்வயலில் உள்ள களைகளை கட்டுப்படுத்தலாம். இவற்றைவிட இயந்திரங்கள் மூலம் நடுகைசெய்து வரிசைகளில் பயிரிடும்போது வரிசைகளுக்கிடையில் கையால் களைகட்டுப்படுத்தும் கருவிகளை பயன்படுத்தலாம். மேட்டுநிலப்பயிர்ச்செய்கையின் போது உள்ளூர் தயாரிப்பு கூட்டுப்பசளைகள் களைகளின் தொல்லையை அதிகரிக்கும். எனவே கூட்டுப்பசளைகளை இட்டு நீர்ப்பிடிப்புடன் உழுதுவிட்டு முளைத்தகளைகளை மடியச்செய்யும் முகமாக இன்னொருமுறை உழுது நிலத்தைப்பண்படுத்தல் பொருத்தமானதாகும். இருப்பினும் பயிர்வளர்ச்சிக்காலங்களில் முடிந்தளவு அவ்வவ்போது களைகளை கையால் அகற்றி கட்டுப்படுத்தமுடியும். பூச்சித்தாக்கமும் சவாலானதொன்றாகும். வேப்பிலைக்கரைசல், வேப்பெண்ணைக்கரைசல், மிளகாய் கரைசல், எருக்கலை, அன்னமுன்னா, நாயுண்ணி போன்ற தாவர இலைக்கரைசல்களை ஓர் சீரான இடைவெளியில் தெளிக்கும்போது பூச்சிகள் விரட்டப்படுகின்றன.

தற்போது 3G கரைசல் உரியமுறையில் தயாரித்து விசிறி காய்துளைப்பான் மற்றும் பனிப்பூச்சி என்பவற்றை வெற்றிகரமாக கட்டுப்படுத்தலாம். பூச்சிகள் காற்றுடன் கொண்டுவரப்படுகின்றமையால் மூன்று மீற்றர் உயரத்திற்கு பூச்சியைத் தடுக்கும் வலைகளையோ அல்லது பசுந்தாட்பசளைகளாக பயன்படுத்தக்கூடிய உயிருள்ள காற்று தடைவேலிகளையோ அமைப்பதனால் பூச்சிகளின் உள்வருகையை தடுத்துவிடமுடியும். நோய்களைப்பரப்பும் பங்கசுக்களை கட்டுப்படுத்த றைகோடோமா எனும் இன்னொரு பங்கசு இனம் வினைத்திறனாகப் பயன்படுத்தப்படுகின்றது.

அத்துடன் பாதி எரிக்கப்பட்ட உமிக்கரி மற்றும் உள்ளூரில் கிடைக்கப்பெறும் மரங்களிலிருந்து உருவாக்கப்படும் உயிர்கரி என்பன வேரழுகல் மற்றும் குமிழ் அழுகளை ஏற்படுத்தும் பங்கசுக்களுக்கு எதிராகப் பயன்படுத்தமுடியும். குறுகிய இடைவெளிகளில் இடப்படும் பயிர்வகைகள் அதிகளவில் நோய்ப்பெருக்கத்திற்கு சாதகமாக அமைவதனால் இடைவெளியை அதிகரித்து காற்றோட்டமுள்ள பயிர்கள் தென்படுமாயின் இந் நோய்ப்பீடையின் கட்டுப்பாடு இலகுவானதாக அமையும். இலைகுழைகள் மாட்டுச்சாணம் மாட்டு சிறுநீர் மற்றும் மண்புழுக்கரைசல் என்பன திரவப்பசளைகளாக வினைத்திறனுடன் பயன்படுத்தமுடியும். கடல் களைகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு செறிவாக்கப்பட்ட திரவப்பசளைகளும் தற்போது கிடைக்கப்பெறுகின்றன. மேற்போந்த திரவப்பசளைகளைப்பயன்படுத்தி விளைச்சலை கணிசமான அளவு அதிகரிக்கலாம்.

சேதனப்பயிர்ச்செய்கை என்பது சமகாலத்தின் தேவையாகியுள்ளது. பயனுள்ள தரவுகளைப் பயன்படுத்தி வீட்டுத்தோட்டங்களையோ அல்லது ஒருங்கிணைந்த பண்ணைமுறைகளையோ மேற்கொள்ள விவசாயிகள் முன்வரவேண்டும். கணிசமான விளைச்சலின் குறைவுஉற்பத்திப்பொருளின் விலை உயர்வு என்பன எதிர்பார்க்கப்பட்டுள்ள சவாலாக இருப்பினும் வளங்கள் உள்ள எமது நாட்டிலும் தற்போது உலகில் 187 நாடுகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் இம்முறையைப்பயன்படுத்தி நாமும் முனைப்புடன் செயற்பட்டு எம்மவர்க்கு தேவையான நஞ்சற்ற உணவு உற்பத்திகளை செய்து வழங்கும் பொறுப்பு சம்பந்தப்பட்ட அனைவரையுமே சார்ந்தது. முனைப்புடன் செயற்படுவோம் முயற்சியில் வெற்றிபெறுவோம்.

# உலக அரசியலை கட்டுப்படுத்த முயற்சிக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியம்

**இ**ரண்டாம் உலகப்போருக்கு பின் போரற்ற உலகம் எனும் முழக்கம் எழுந்தது. ஆனால், சோவியத் ரஷ்யாவை வீழ்த்தவும், ஜெர்மனை வளரவிடாமல் தடுக்கவும் நேட்டோ அமைப்பை அமெரிக்கா உருவாக்கியது. சோவியத் யூனியன் வீழ்ந்த பிறகும் நேட்டோ தொடர்கிறது. இந்த நேட்டோ காரணமாகவே ரஷ்யா – உக்ரைன் போர் ஏற்பட்டுள்ளது. இந்தப்போரை முடிவுக்கு கொண்டுவர மனிதநேயம் மிக்கவர்கள் வலியுறுத்துகின்றனர். ஆனால் உக்ரைன் ஆளும் கூட்டம் போரை நீட்டிக்க விரும்புகிறது. உலகம் முழுவதும் ஆயுதம் விற்பனை செய்யும் கூட்டத்தின் பிரதிநிதிகள் ஐரோப்பா, அமெரிக்காவின் ஆளும் வர்க்கமாக உள்ளனர். இந்தக் கூட்டம், போரை தங்களது இலாப வேட்டைக்கும், மூலதனக் குவியலுக்கும் வாய்ப்பாகக் கருதுகிறது.

### ஆதிக்கத்தை நிலைநிறுத்த முயற்சி

மேற்கத்திய, ஐரோப்பிய நாடுகள் ஆயுதங்களை ஒருங்கிணைந்த முறையில் தடையின்றி வழங்க வேண்டுமென்று உக்ரைன் வெளியுறவுத்துறை அமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார். ஆகவே, போர் தற்போதைக்கு முடிவுக்கு வராது. இந்தப்போரை பயன்படுத்தி ஐரோப்பிய, ஆசிய அரசியலை தனது ஆதிக்கத்திற்குள் கொண்டு வர அமெரிக்க ஏகாதிபத்தியம் முயற்சிக்கிறது. அதற்காக நேட்டோவை பலப்படுத்துகிறது. நேட்டோவிற்குள் புதிய நாடுகளை சேர்க்கிறது. அதன்வாயிலாக ஏகாதிபத்தியத்திற்குள் உள்ள முரண்பாடுகளை கட்டுப்படுத்தி, உலகம் முழுவதும் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் பணிகளை செய்கிறது.

### இந்தியாவுடன் உறவு ஏன்?

மேலும், ரஷ்யாவை பலவீனப்படுத்தி, சீனாவின் பொருளாதார, அரசியல் வல்லமையை கட்டுப்படுத்த இந்தியாவுடன் உறவு கொண்டாடுகிறது. இதன்வாயிலாக உலக அரசியலை தனது ஆதிக்கத்திற்குள் கொண்டு வர

**தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...**

# உலகமயமாக்கலும் இந்தியாவும்: 1991 ஆம் ஆண்டு இந்திய அந்நியச்செலவாணி நெருக்கடி

**உ**லகமயமாக்கல் எனும் புதிய உலகுக்குள் 1991இல் இந்தியா நுழைந்தது. பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள வேண்டிய கட்டாயம் வாங்கிய கடனுக்குத் தங்கத்தை அடமானம் வைக்கும் நிலை என்று தத்தளித்துக்கொண்டிருந்த இந்தியப் பொருளாதாரம், கடும் விமர்சனங்களுக்கு மத்தியில் துணிச்சலுடன் அந்த முடிவை எடுத்தது. இதோ இன்றைக்கு 31 ஆண்டுகள் கடந்துவிட்டன. கடந்துவந்த பாதையைத் திரும்பிப் பார்க்கும் தருணம் இது!



**இராம. சீனுவாசன்**
சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்

இந்தியாவின் அந்நியச் செலாவணி இருப்பு, 1990 ஒகஸ்ட் மாதத்திற்குள் 311 கோடி (3.11 பில்லியன்) டொலர்களாக குறைந்தது. ஜனவரி 1991 இல், இந்தியாவின் கையிருப்பு வெறும் 89 கோடி (890 மில்லியன்) டொலர் மட்டுமே. அப்போது இந்தியாவின் மக்கள் தொகையும் 891 மில்லியனாக இருந்தது.

**1991 பொருளாதார நெருக்கடி: என்ன பின்னணி?**

வெளிநாட்டில் வாங்கிய கடனின் ஒரு தவணையைக்கூட இந்தியா செலுத்தத் தவறிவிடுமோ என்ற இக்கட்டான பொருளாதாரச் சூழல் அக்காலகட்டத்தில் உருவாகியிருந்தது. இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெளிநாட்டுக் கடன் 26%, உள்நாட்டுக் கடன் 55%. அப்போது இந்தியாவிடம் இருந்த அந்நியச் செலாவணிக் கையிருப்பு இரண்டு வார இறக்குமதிக்குக்கூடப் போதவில்லை. இச்சூழலில், வெளிநாட்டுக் கடன் தவணையை எவ்வாறு கொடுப்பது? இதுமட்டுமல்லாமல், ஏற்றுமதி – இறக்குமதி இடைவெளி அதிகரித்துக்கொண்டே போனது. அரசின் உள்நாட்டுக் கடன் பெருகியதால் இரண்டு விளைவுகள் ஏற்பட்டன ஒன்று, பண அளிப்பு அதிகரித்து விலைவாசி 15%–தைக் கடந்தது. இரண்டு, வட்டி விகிதம் உயர்ந்து தனியார் முதலீடும் தேய்ந்தது.

**இந்தச் சிக்கல் வர என்ன காரணம்?**

பொருளாதாரச் சிக்கல் என்பது, நேற்று பெய்த மழையில் நனைந்து இன்று காய்ச்சல் வருவது போலன்று. பல ஆண்டுகளாக நடந்துவரும் பொருளாதார நிகழ்வுகளைச் சரியாகப் புரிந்துகொள்ளாதது, சாதுரியமான அரசியல் ஆளுமை இல்லாமல் – சரியான பொருளாதாரக் கொள்கை முடிவுகளை எடுக்காமல் இருந்ததன் ஒட்டுமொத்த விளைவுதான் 1991 பொருளாதாரச் சிக்கல்.

**அப்படியானால், 1950–1990 காலகட்டத்தின் 40 ஆண்டு பொருளாதாரக் கொள்கைகள்தான் இதற்குக் காரணமா?**

இல்லை. பொருளாதாரக் கொள்கைகளும் நடவடிக்கைகளும் தொடர் நிகழ்வுகளாக இருந்தாலும், 1980~களில் இந்தச் சிக்கலுக்கான விதை ஆழமாக ஊன்றி வளர்ந்தது. இந்த 10 ஆண்டுகளில் 8 நிதி அமைச்சர்கள் இருந்துள்ளனர். இதில், கடைசி 5 ஆண்டுகளில் மட்டும் 6 நிதி அமைச்சர்கள் இருந்திருக்கின்றனர். இப்படியான நிலையில், பொருளாதாரக் கொள்கைகளில் தொடர்ச்சி எப்படி இருந்திருக்கும்?

**1980 நிலவரம்தான் இந்தச் சிக்கலின் தொடக்கமா?**

1980இல் நாம் இதுபோன்ற ஒரு பொருளாதாரச் சிக்கலைச் சந்தித்தோம். அன்றும் இறக்குமதிக்குப் போதிய அந்நியச் செலாவணி இல்லாமல், அரசின் பட்ஜெட் பற்றாக்குறை அதிகரித்து, பணவீக்கம் உயர்ந்து, இந்தச் சூழலில் பன்னாட்டுச் செலாவணி நிதியத்திடம் ஒரு பில்லியன் டொலர் வரை கடன் வாங்கினோம். இதில் பெரும் பகுதி பெட்ரோலியத் துறையில் முதலீடு செய்யப்பட்டது. 1981-82ஆம் ஆண்டு பட்ஜெட்டின் பற்றாக்குறையும் வெகுவாகக் குறைக்கப்பட்டது. இதற்காக வரி வருவாய் பெருக்கப்பட்டது, பெட்ரோல், உரம், மின்சாரம் விலைகள் உயர்த்தப்பட்டன. ஆனால், அடுத்த ஆண்டே இந்த முயற்சிகள் கைவிடப்பட்டு, மீண்டும் அரசின் பட்ஜெட் பற்றாக்குறை உயர ஆரம்பித்தது.

**1980–களில் அரசின் பட்ஜெட் பற்றாக்குறை அதிகரித்ததற்கு என்ன காரணம்?**

1980–கள் முழுவதும் அரசின் பட்ஜெட் பற்றாக்குறை 7% முதல் 10% வரை இருந்தது. ஒருபுறம் அரசின் வரி வருவாய் அதிகரிக்கவே இல்லை. வரி வருவாயும், வரி அல்லாத வருவாய்களாக இருக்கும் அரசு நிறுவனங்களின் இலாபம், அரசுத் துறைகளின் வசூல் என எதுவும் உயரவில்லை. அவற்றை உயர்த்த அரசும் முனையவில்லை. அரசின் செலவுகள் பல வகைகளில் உயர்ந்தது – அரசுத் துறை நிறுவனங்களின் முதலீட்டினை உயர்த்தியது, அதிகக் கடனை அதிக வட்டிக்கு வாங்கியதும் அடுத்த ஆண்டுகளில் அரசின் வட்டிச் செலவை உயர்த்தின. அரசு ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியச் செலவுகள் உயர்ந்தன.

**அந்நியச் செலாவணிச் சிக்கலுக்கு என்ன காரணம்?**

1980–களின் முற்பகுதியில் அரசுத் துறை நிறுவனங்களில் முதலீடுகளை அரசு உயர்த்தியது. அதே நேரத்தில், அரசு நிறுவனங்கள் வெளிநாடுகளில் கடன் வாங்கவும் அனுமதி வழங்கப்பட்டது. முதலீடுகள் உயர்ந்தாலும், அரசு நிறுவனங்களின் லாபம் உயராமல் இருந்ததால், வாங்கிய கடனுக்கான முதலும் வட்டியும் 1980–களின் பிற்பகுதியில் பெருகிக்கொண்டே போனது. இவற்றை அந்நியச் செலாவணி கொண்டுதான் அடைக்க வேண்டும். 1980–களின் பிற்பகுதியில் இந்தியாவில் அந்நிய முதலீடும், இறக்குமதியும் தாராளமாக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து இறக்குமதி உயர்ந்ததுபோல ஏற்றுமதி உயராமல் இருந்ததால் அந்நியச் செலாவணி செலுத்துநிலையில் இடைவெளி அதிகரித்தது.

இந்த 10 ஆண்டுகளில் இந்தியாவுக்கு வந்துகொண்டிருந்த அந்நிய நாட்டுக் கொடைகளும் மூன்றில் ஒரு பங்காகக் குறைந்தன. கச்சா எண்ணெய் விலை தொடர்ந்து உயர்ந்த நிலையில் இருந்தது. வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் இந்தியாவில் வைத்திருந்த சேமிப்புக் கணக்கு வைப்பு நிதியும் குறைய ஆரம்பித்தது.

**இது எப்படிப் பொருளாதார வளர்ச்சியைப் பாதித்தது?**

1970–களுடன் ஒப்பிடும்போது 1980–களில் பொருளாதார வளர்ச்சி அதிகமாக இருந்தது. 1980–வரை இந்தியாவின் ஆண்டுப் பொருளாதார வளர்ச்சி 3.5% வரைதான் இருந்தது. இதனை 'இந்து வளர்ச்சி விகிதம்'என்றே பழித்தனர். அதாவது, இந்தியா இதற்கு மேல் வேகமாக வளர முடியாது என்ற எண்ணம் அது. இதைப் பொய்யாக்கும் விதத்தில் 1980–களில் 5% பொருளாதார வளர்ச்சியை அடைந்தோம். ஆனால், இந்த வளர்ச்சி நிலையில்லாதது என்பதை வெகுவேகமாகப் புரிந்துகொண்டோம். 1991–92இல் இந்தியாவின் ஆண்டு வளர்ச்சி விகிதம் 1.2%தான்.

**பணவீக்கம் அதிகரித்ததற்கு என்ன காரணம்?**

அப்போதுள்ள நடைமுறைப்படி இந்திய அரசு பட்ஜெட் பற்றாகுறையைச் சரிக்கட்ட இரண்டு வழிகளில் கடன் வாங்கலாம். ஒன்று, மத்திய ரிசர்வ் வங்கியிடம். மற்றொன்று, அதனிடம் உள்ள அரசு வங்கிகளிடம். மத்திய ரிசர்வ் வங்கிக்கு அரசு தன் கடன் பத்திரங்களைக் கொடுத்து, மிகக் குறைந்த வட்டிக்குக் கடன் வாங்கலாம். மத்திய ரிசர்வ் வங்கியும் அதற்கு இணையாகப் பணத்தை அச்சிட்டு வழங்கும். இதனால் பணவீக்கம் ஏற்படும். அரசுத் துறை வங்கிகளிடம் மத்திய அரசு கடன் வாங்கும்போது, வங்கியினால் தனியார் துறைக்குக் கடன் கொடுக்கப் பணம் இருக்காது. அல்லது அதிக வட்டிக்குத்தான் கடன் கொடுக்க வேண்டும். இதனால், தனியார் உற்பத்திச் செலவு உயர்ந்து பணவீக்கம் ஏற்படும். எனவே, அரசு தொடர்ந்து அதிக பட்ஜெட் பற்றாக்குறை வைத்திருந்ததால், பணவீக்கம் கட்டுக்கடங்காமல் போனது.

**இதற்கான முன்னெச்சரிக்கை சமிக்ஞைகள் எதுவும் நமக்குத் தெரியவில்லையா?**

1980–களில், மத்திய அரசு 'தொடர்ந்து பட்ஜெட் பற்றாக் குறையை வைத்திருப்பது தவறு, அதனைச் சரிசெய்ய மத்திய ரிசர்வ் வங்கிடம் கடன் வாங்குவதும் தவறு' என்று மத்திய ரிசர்வ் வங்கி ஆளுநர்கள் மன்மோகன் சிங்கும் (1982–85), ஆர்.என். மல்ஹோத்ராவும் (1985–90) சுட்டிக்காட்டினர். இது பணவீக்கத்தை அதிகரிக்கிறது என்பதை எடுத்துக்காட்டி எச்சரித்தனர். இதை யாரும் கேட்கவில்லை. குறிப்பாக ஆர்.என்.மல்ஹோத்ரா மத்திய அரசுக்கு 1989 மே மாதம் எழுதிய கடிதத்தில், "தீர்க்கமான முடிவுகள் எடுக்கா விடில், அந்நியச் செலாவணி செலுத்துநிலை பற்றாக்குறை விரிவடையும். குறிப்பாக, குறைந்த அந்நியச் செலாவணி கையிருப்பு இருப்பதால், ஏற்றுமதி – இறக்குமதி இடை வெளியைக் குறைக்க வேண்டும்" என்று எச்சரித்தார்.

உலக வங்கி தனது ஆண்டு அறிக்கைகளில் அவ்வப் போது இந்தியாவின் பொருளாதார நிலை குறித்து கவலை தெரிவித்தது. குறிப்பாக, கட்டுக்கடங்காமல் போகும் அந்நியச் செலாவணி செலுத்துநிலை பற்றாக்குறை, பட்ஜெட் பற்றாக்குறை ஆகியவற்றை அந்த அறிக்கைகள் சுட்டிக்காட் டின. உலக வங்கியிடம் கடன் வாங்கப்போவதில்லை என்று நினைத்ததால் அவர்கள் சொல்வதை நாம் பெரிதாக எடுத்துக்கொள்ளவும் இல்லை.

**இந்தியா தங்கத்தை அடமானம் வைத்ததாகச் சொல்லப்பட்டதே?**

1991 மே 16இல் இந்திய ஸ்டேட் வங்கி 200 மில்லியன் டொலர் மதிப்புள்ள தங்கத்தை சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த ஒரு வங்கியிடம் விற்றது. 1991 ஜூன் 21இல் நரசிம்ம ராவ் பிரதமராகவும், மன்மோகன் சிங் நிதி அமைச்சராகவும் பதவி ஏற்றனர். ஜூலை 4–18, 1991 ஆகிய இரண்டு வாரங்களில் நான்கு தவணைகளில் மத்திய ரிசர்வ் வங்கி, இங்கிலாந்து வங்கியிடம் 47 தொன் தங்கத்தை அடமானம் வைத்து 400 மில்லின் டொலர் கடன் வாங்கியது. தங்கத்தை அடமானம் வைக்கும் முடிவு முந்தைய அரசு மே மாதமே எடுத்தாலும் அதனைச் செயல்படுத்த ஜூலை மாதம் ஆனது. இதுமட்டுமல்லாமல் பன்னாட்டுச் செலாவணி நிதியத்திடம் 220 மில்லியன் டொலர் அவசரக் காலக் கடன் வாங்கினோம். ஜூலை 24, 1991 மன்மோகன் சிங் தனது முதல் பட்ஜெட் உரையை நாடாளுமன்றத்தில் நிகழ்த்தினார்.

**இதுதான் புதிய பொருளாதாரக் கொள்கையின் ஆரம்பமா?**

ஓம். அரசுக் கட்டுப்பாட்டில் இருந்த பெட்ரோல், உரம், சர்க்கரை, சமையல் எரிவாயு ஆகிய பொருட்களின் விலைகள் உயர்த்தப்பட்டன. வெளிநாட்டு இந்தியர்கள் இந்தியாவில் முதலீடு செய்ய ஊக்கப்படுத்தப்பட்டனர். கறுப்புப் பணத்தையும் சொத்தையும் மீண்டும் கணக்கில் கொண்டுவந்து வரி செலுத்த ஒரு முறை வாய்ப்பு வழங்கப்பட்டது. வட்டி வருமானம், கமிஷன் வருமானம் வழங்கும் போது வருமான வரிப் பிடித்தம் செய்ய வழி செய்யப்பட்டது. ஏற்றுமதி ஊக்கப்படுத்தப்பட்டது. வெளிநாட்டு முதலீடு களை இந்தியா கவர புதிய திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. ஏற்றுமதித் தொழிலில் உள்ள நிறுவனங்கள் இறக்குமதி செய்ய வழிமுறைகள் எளிதாக்கப்பட்டன. இந்திய ரூபாயின் அந்நியச் செலாவணி மாற்று விகிதம் ஜூலை 1 அன்று 9% மீண்டும் ஜூலை 3 அன்று 11% குறைக்கப்பட்டது. இதனால் இறக்குமதி குறைந்து, ஏற்றுமதி அதிகரிக்கும்

வாய்ப்பு உருவானது.

அடுத்த சில மாதங்களில் பல பொருளாதாரக் கொள்கை மாற்றங்கள் நிகழ்ந்தன. வரி விதிப்பு எளிமையாகி, வரி விகிதங்கள் குறைந்தன. அரசு செலவுகளைக் குறைக்க முடிவுகள் எடுக்கப்பட்டன. பொதுத் துறை முதலீடுகள் தனியாருக்கு விற்கப்பட்டன. இறக்குமதி எளிமையாக்கப்பட்டு, அதன் மீது வரி விகிதமும் குறைக்கப்பட்டது. பங்குச் சந்தையைக் கண் காணித்து முறைப்படுத்த 'செபி'க்கு அதிகாரம் வழங்கப்பட்டது. வங்கிகளில் அரசு கடன் வாங்குவது குறைந்து, தனியாருக்குக் கடன் கொடுப்பது ஊக்குவிக்கப்பட்டது. தொழில் துறை மீதான எல்லா கட்டுப்பாடுகளும் படிப்படியாகக் குறைக்கப்பட்டன. எல்லாத் துறைகளிலும் தனியார் துறை பங்களிப்பு ஊக்கப்படுத்தப்பட்டது.

**நவீன இந்தியாவில் உலகமயம் பிறந்தது!**

(இலங்கையின் தற்போதைய அந்நியச்செலவாணி நெருக்கடி தொடர்பாக சகல ஊடகங்களிலும் பேசப்பட்டு வருகின்றது. இலங்கை ஏதோ கொந்தளிப்பு நிலைமையிலிருப்பதாகக் காட்டப்படுகின்றது. இலங்கையின் இன்றைய நிலைமைக்கு காரணமான கடந்தகால ஆட்சியாளர்கள் மக்களை வீதிகளில் இறங்கிப் போராடுமாறு அறைகூவல் விடுக்கின்றனர்.

ஆனால் இந்தியா 1991 ஆம் ஆண்டு இதைவிட மோசமான அந்நியச்செலவாணி நெருக்கடியிலிருந்தது என்பதை இலங்கையில் பலரும் மறந்துவிட்டார்கள். வெளிநாடுகளுக்குத் தர வேண்டிய பணத்தைத் திரும்ப செலுத்த முடியாமல் தவித்தது இந்தியா. மூன்று வாரங்களுக்கான இறக்குமதிக்கே அந்நியச் செலாவணி கையிருப்பு இருந்தது. ஐ.எம்.எ:ப் (IMF) நிதி நிறுவனத்திடமிருந்து கடன் வாங்கித்தான் இந்தியா நெருக்கடியிலிருந்து மீண்டது. இப்போது இந்தியாவின் அந்நியச் செலவாணி கையிருப்பு கிட்டத்தட்ட 600 பில்லியன் டொலர்கள்.

மேலேயுள்ள கட்டுரை இந்தியாவின் அன்றைய நிலைமையை விளக்கப் போதுமானது.)

**நன்றி: சக்கரம் இணையத்தளம்**

# யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்கு பொலிஸ் உயரதிகாரி புகழாரம்

**இ**லங்கையின் ஏனைய மாவட்டங்களோடு ஒப்பிடும்போது, யாழ்ப்பாண மாவட்டத்து மக்கள் சிறந்தவர்கள் என யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உயித் என்.பி லியனகே தெரிவித்துள்ளார்.

“நாடு தழுவிய பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டின் ஏனைய பகுதிகளில் ஏற்பட்ட சம்பவங்களோடு ஒப்பிடும்போது, யாழ்ப்பாண மாவட்ட மக்கள் எவ்விதமான வன்முறைகளிலோ, எதிர்ப்பு நடவடிக்கையிலோ ஈடுபடாமை மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும்” என்று யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் பொறுப்பதிகாரி அலுவலகத்தில் 23.0.2022 அன்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது, அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் கருத்துரைக்கையில்,

“ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள் தமது அன்றாட செயற்பாடுகளை எவருக்கும் இடையூறு விளைவிக்காத வகையில், பொலிஸ் அதிகாரிகளுடன் முரண்படாமல் முன்னெடுத்து வருகின்றார்கள்.

யாழ். மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்குகின்றார்கள். எனவே, பொலிஸ் திணைக்களம் என்ற ரீதியில் யாழ்ப்பாண மக்களுக்கு நாங்கள் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

அத்தோடு, யாழ். மாவட்டத்தில் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு நாம் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். பரீட்சைக்கு செல்லும் மாணவர்களுக்கு ஏற்படும் இடையூறுகளை தடுப்பதற்கு அனைவரும் ஒத்துழைக்கவும்.

பரீட்சை காலங்களில் நிபந்தனைகளுடன் மாத்திரமே ஒலிபெருக்கி அனுமதியை பொலிஸார் வழங்குகின்றோம். கோவில் திருவிழாக்களின் போது, ஒலிபெருக்கி சத்தத்தை மிகவும் குறைத்துப் போடுவதன் மூலம் மாணவர்களின் கல்வியில் பாதிப்பு ஏற்படுத்துதைத் தவிர்க்கலாம்.

யாழ். மாவட்டத்தில் குற்றச்செயல்கள் சில இடங்களில் இடம்பெற்றுள்ளன. அவ்வாறான சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை உரிய தரப்பினரின் உதவியுடன் பொலிஸார் கைது செய்திருக்கிறார்கள். சிலர் தலைமறைவாகியுள்ளனர்.

எனவே, அவர்களை கைதுசெய்ய பொலிஸாருக்கு யாழ். மக்களின் ஒத்துழைப்புக் கிடைக்கப்பெற்றால் குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்களை சட்டத்தின் முன் நிறுத்த முடியும்” என்றார்.

# இலங்கை சுற்றுலா பயணிகளின் வருகை 60% வீழ்ச்சி

**நா**ட்டில் நிலவும் நெருக்கடி நிலை காரணமாக இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 60 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

உணவு, எரிபொருள் நெருக்கடி நிலை மற்றும் நாட்டில் நிலவும் குழப்பகரமான சூழ்நிலை தொடர்பில் உள்ளூர், சர்வதேச ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் பிரசாரங்கள் இதற்கு நேரடி காரணமாக அமைந்துள்ளதாகவும் அந்த அதிகார சபை தெரிவித்துள்ளது.

மேற்படி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் தம்மிகா விஜேசிங்க அது தொடர்பில் மேலும் கூறுகையில்,

நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடி நிலையில் சுற்றுலாத் துறையின் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது மிகவும் அவசியம். ஆனால் அது இன்று பெரும் சவாலுக்கு முகங்கொடுத்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

மார்ச் மாதத்தின் பின்னர் எழுந்துள்ள பல்வேறு நெருக்கடிகள் அதற்கு காரணம் என தெரிவித்துள்ளதுடன், பழைய நிலைமைக்கு சுற்றுலாத்துறை இயல்பு நிலையை அடைவதற்கு இன்னும் எவ்வளவு காலம் எடுக்கும் என கூற முடியாதுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்

# "நேட்டோவும் வேண்டாம்! அணுகுண்டும் வேண்டாம்!!" - இங்கிலாந்து இளம் கம்யூனிஸ்டுகள் போர்க்குரல்




**இங்கிலாந்தில் உள்ள ஒரு குட்டி நகரம்**

என்ன திடீரென்று இடிச்சத்தம் என திகைத்துப் போய் அந்த நகரத்து மக்கள் வானத்தைப் பார்த்தனர். இரண்டு பி–29 ரக குண்டு வீசும் விமானங்கள்தான் சுற்றிக் கொண்டிருந்தன. தங்கள் ஊரைத்தான் குறிவைத்துள்ளன என்ற அச்சத்தில் அங்குமிங்கும் ஓடத் தொடங்கினர்.

இது நடந்தது 1949 ஆம் ஆண்டில். இரண்டாம் உலகப் போரின் பாதிப்புகளில் இருந்து இங்கிலாந்து மீண்டு வந்த நேரமாகும். போர் முடிந்துவிட்ட நிலையில் குண்டுவீசும் விமானங்கள் எதற்காக வந்தன என்ற கேள்விகள் அப்பகுதி மக்களின் மனங்களைத் துளைத்துக் கொண்டிருந்த வேளையில், பயிற்சிக்காக அமெரிக்காவில் இருந்து போர் விமானங்கள் வந்துள்ளன என்றும், விரைவில் திரும்பி விடும் என்றும் அரசு சொன்னது.

ஆனால் 73 ஆண்டுகள் கழிந்துவிட்டன. அமெரிக்க முகாம்கள் இங்கிலாந்து மண்ணில் இன்னமும் வேரூன்றி நிற்கின்றன. அமெரிக்கப் படை வீரர்கள், துணை ஊழியர்கள் மற்றும் குடும்பத்தினர் என்று 24 ஆயிரம் பேர் இங்கிலாந்தில் இருக்கிறார்கள். தற்போது 13 அமெரிக்கப் படைத்தளங்கள் இங்கிலாந்தில் உள்ளன. அதிலும் குறிப்பாக, கிழக்கு இங்கிலாந்தில் மூன்று படைத்தளங்கள் அமைந்திருக்கின்றன. லிபியா, ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக் ஆகிய நாடுகளின் மீது தாக்குதல் நடத்திய போர் விமானங்கள் இந்த படைத்தளங்களில் இருந்துதான் இயக்கப்பட்டன.

அப்பகுதியில் உள்ள மக்களில் பலரும் கூட அமெரிக்கப் படைத்தளங்கள் தங்களுக்கு பாதுகாப்பாக இருக்கும் என்று நம்பத் தொடங்கியிருந்தனர். ஆனால், லேகன்ஹீத்தில் (Lakenheath) நடந்த இரண்டு சம்பவங்கள் அவர்களின் நிம்மதியைக் கெடுத்தன. ஜூலை 27, 1956 அன்று நடந்த ஒரு சம்பவத்தில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த பி–47 ரக போர் விமானம், தரையைத் தொடுவது போல் வந்து மீண்டும் மேலெழும் பயிற்சியை மேற்கொண்டிருந்தது. நான்காவது முறை தரையைத் தொடுவது போல வந்த அந்த விமானம், மேலெழாமல் அணுகுண்டுகள் வைக்கப்பட்டிருந்த கட்டிடத்திற்குள் புகுந்தது. கட்டிடம் முழுக்க தீப்பிழம்புகள் மற்றும் புகைமயமாக இருந்தது.

**பாலைவனமாக மாறியிருக்கும்**

தீ அணைக்கப்பட்ட பிறகு, அணு ஆயுதங்களைச் சோதனை செய்தனர். அவை பத்திரமாக இருந்தன. 6 ஆயிரத்து 800 கிலோ வெடிமருந்துகள் கொண்ட அணுகுண்டுகள் வெடிக்காததால் மக்கள் தப்பித்தனர். ஒருவேளை, இந்தத் தீ விபத்தில் அணுஆயுதங்கள் வெடித்திருந்தால் கிழக்கு இங்கிலாந்து பாலைவனமாக மாறியிருந்திருக்கலாம் என்று ஒரு அமெரிக்க இராணுவ அதிகாரி கருத்து தெரிவித்தார். இதே போன்றதொரு சம்பவம் ஜனவரி 1961ல் மீண்டும் நடந்தது. அப்போதும் வெடிவிபத்து நடக்காமல் தப்பித்தனர்.

அப்போதிருந்து இங்கிலாந்து மண்ணிலிருந்து அமெரிக்க ஆயுதங்கள் வெளியேற வேண்டும் என்று மக்கள் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். 1990களில் அமெரிக்காவின் படைத்தளங்களின் எண்ணிக்கை 100 ஆக இருந்தது. மக்கள் போராடி வருவதால் அதன் எண்ணிக்கை தற்போது 13 ஆகக் குறைந்துவிட்டது. அமெரிக்க அணுகுண்டுகள் இங்கிலாந்து மண்ணிலிருந்து வெளியேறின. ஆனால், அண்மையில் அமெரிக்காவின் தலைமையிலான இராணுவக் கூட்டணியான நேட்டோ வெளியிட்ட அறிக்கையில் அணுஆயுதங்களை இருப்பு வைக்கும் இடமாக பிரிட்டன் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

அணு ஆயுதங்களைத் தாங்கிச் செல்லும் எப்–35ஏ ரக விமானங்கள் கிழக்கு இங்கிலாந்தில் உள்ள படைத்தளம் ஒன்றிற்கு வந்திறங்கியுள்ளன. 24 விமானங்கள் இங்கு நிறுத்தப்படும் என்று தெரிகிறது. மீண்டும் அணு ஆயுதங்களை பிரிட்டனில் வைக்கும் திட்டத்துடன்தான் அமெரிக்கா களமிறங்கியுள்ளது. இதற்கு கிழக்கு இங்கிலாந்தின் இளம் கம்யூனிஸ்டுகள் லீக் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. அவர்களின் படைத்தளங்களோடு இங்கிருக்கிறார்கள் என்றால், ஆக்கிரமிக்கப்பட்ட நாடாகவே பிரிட்டன் இருக்கும் என்று விமர்சனம் செய்திருக்கிறார்கள்.

புதிய நிலைமை குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள கம்யூனிஸ்டு தலைவர்களில் ஒருவரும், வரலாற்றாய்வாளர்களில் ஒருவருமான ஏ.எல்.மார்டன், 'அத்துமீறி உள்ளே நுழைந்தவர்களிடம் நாம்தான் சொல்ல வேண்டும். உங்கள் நாட்டுக்குச் செல்லுங்கள். நீங்கள் இருக்க வேண்டியதில்லை' என்றார். மீண்டும் அமெரிக்காவின் அணுஆயுதங்களை வைக்கும் கிடங்காக பிரிட்டன் மாறப் போகிறதா என்பதை அரசு

**தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...**

9ம் பக்கத்தொடர்ச்சி...

அமெரிக்க ஏகாதிபத்தியம் முயற்சிக்கின்றது. யேமன், சிரியாவை உருக்குலைப்பதிலும், இலங்கை பொருளாதார நெருக்கடியிலும், இந்தியாவில் எல்.ஐ.சி (LIC) யை விற்பதிலும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலையீடு உள்ளது. 500 கார்ப்பரேட் கம்பெனிகளின் நலனுக்காக உலகம் வேட்டையாடப்படுகிறது் உலகின் இயற்கைவளம் அழிக்கப்படுகிறது. தற்போதுள்ள சூழலில் ரஷ்யா–உக்ரைன் போர் நீடிக்கும். பேச்சுவார்த்தை மூலமே போரை முடிவுக்குக் கொண்டு வர முடியும். இதற்கு வெகு மக்கள் வலுவாக குரல் எழுப்ப வேண்டும். அடையாள அணிதிரட்டல், இனவெறி போன்றவை வர்க்க ஒற்றுமையை சிதைப்பதோடு, ஏகாதிபத்தியத்திற்கு ஆதரவாகவே உள்ளன. இதுவே உக்ரைன் போரின் படிப்பினையாக உள்ளது. உக்ரைனில் இரண்டுமுறை ஆட்சிக்கவிழ்ப்பு நடந்துள்ளது. அவற்றை ஆரெஞ்ச் புரட்சி, மைதானப் புரட்சி என்றனர். ஆளும் வர்க்கத்தை முற்றாக வீழ்த்தி, கோடான கோடி உழைக்கும் வர்க்கத்தின் தலைமையில் ஆட்சி அமைவதுதான் புரட்சி. புரட்சி என்ற வார்த்தையை மலினப்படுத்த ஆட்சிக் கவிழ்ப்பை 'புரட்சி' என்றார்கள்.

**ஒருசார்பு ஊடகங்கள்**

ரஷ்யாவிற்கு எதிராக ஐ.நா.வில் வாக்களிக்காமல் இந்தியா வெளிநடப்பு செய்தது. மின்சாரம் உள்ளிட்ட பல்வேறு தேவைகளுக்கு ரஷ்யாவை சார்ந்து இருப்பதாலும், அம்பானி, அதானி போன்ற பெரும் முதலாளிகளை பாதுகாக்க வேண்டும் என்பதாலும் அமெரிக்காவின் துதிபாடியான பிரதமர் இந்த நிலையை எடுத்துள்ளார். சி.என்.என் (CNN) போன்ற சேனல்கள் முதலாளித்துவவாதிகளால் நடத்தப்படுகின்றன. அவை கார்ப்பரேட்டுகளின் குரல்களையே பிரதிபலிக்கின்றன. அவற்றைப் பின்பற்றியே பிற ஊடகங்களும் இயங்குகின்றன. அதனால் இந்த ஊடகங்கள் ஒருசார்பான செய்திகளையே வெளியிடுகின்றன. போருக்கு எதிரான முழக்கம் அழுத்தமாக உலகம் முழுக்க ஒலிக்க வேண்டும். இடதுசாரிகளின் பின்னால் உலகம் அணி திரண்டால்தான் ஏகாதிபத்தியத்தை வீழ்த்த முடியும். ஏகாதிபத்திய முறைமை அழிந்தால்தான் போர், வேலையின்மை, வறுமைக்கு முடிவு கட்ட முடியும்.

(மே 18ந் திகதி நடைபெற்ற இ.பா.சிந்தன் எழுதி, பாரதி புத்தகாலயம் பதிப்பித்துள்ள 'உக்ரைனில் என்ன நடக்கிறது?' என்ற நூல் வெளியீட்டு நிகழ்ச்சியில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயற்குழு உறுப்பினர் என்.குணசேகரன் ஆற்றிய உரை)

13ம் பக்கத்தொடர்ச்சி...

தெளிவுபடுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள கிழக்கு இங்கிலாந்தின் இளம் கம்யூனிஸ்டுகள் அமைப்பு, அந்தச் செய்தி உண்மையாக இருந்தால் அந்த ஆயுதங்கள் உடனடியாக விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் என்று கோரியிருக்கிறது.

மக்களின் பெரும்போராட்டங்களால் அமெரிக்க அணு ஆயுதங்கள் பிரிட்டனிலிருந்து வெளியேறின. பிரிட்டனின் பதின்பருவத்தினர் அத்தகைய அபாயம் என்ன என்றால் என்றே தெரியாமல் தங்கள் வாழ்க்கையைக் கழித்திருக்கிறார்கள்.

**மீண்டும் அபாயம் சூழ்கிறது**

இதனால் பிரிட்டனில் உள்ள அனைத்து அமெரிக்க மற்றும் நேட்டோ படைத்தளங்களையும் விலக்கிக் கொள்ள வேண்டும் என்றும், வெளிநாடுகளில் உள்ள பிரிட்டன் படைவீரர்களை திரும்ப அழைக்க வேண்டும் என்றும், இராணுவச் செலவுகளைக் குறைத்துக் கொண்டு சுகாதாரம், கல்வி, வீட்டுவசதி மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவற்றிற்கு செலவழிக்குமாறு கிழக்கு இங்கிலாந்தின் இளம் கம்யூனிஸ்டுகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

ஆதாரம்: இளம் கம்யூனிஸ்டுகள் லீக் (கிழக்கு இங்கிலாந்து) வெளியிட்டுள்ள அறிக்கை.

முன்பக்கத்தொடர்ச்சி...

போன்ற பொருட்களை உற்பத்தி செய்து வந்த வட பகுதி விவசாயிகள் அதிக வருமானம் பெற்றனர்.

அதேபோல வெளிநாட்டுத் துணிகளுக்கு இறக்குமதி கட்டுப்பாடு விதித்ததால், நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருந்த (பெரும்பாலும் முஸ்லீம் மக்கள்) கிழக்கிலங்கை மற்றும் வட பகுதி மக்கள் அதிக நன்மை பெற்றனர். அந்தக் காலத்தில் பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் உற்பத்தி செய்த தரம் வாய்ந்த காற்சட்டைத் துணியை வாங்குவதற்கு மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

அதுமாத்திரமின்றி, சிறீமாவோ அரசு மேற்கொண்ட இறக்குமதிக் கட்டுப்பாட்டுக் கொள்கையால் கடல் உணவு உற்பத்தியும் அதிக அளவில் பெருகி மீனவ சமூக மக்களும் பல நன்மைகளைப் பெற்றனர்.

இன்னொரு புறத்தில் உள்நாட்டு சிறு தொழில் உற்பத்திகளும் பல்கிப் பெருகின.

இந்த நிலைமை உருவாவதிற்கு அன்றைய அரசின் முற்போக்கான பொருளாதாரக் கொள்கைகளே அடிப்படைக் காரணங்களாக இருந்தன. ஏனெனில் அந்த அரசின் பங்காளிகளாக ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வில் வளர்ந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சியும், சோசலிசக் கொள்கைகளைக் கொண்ட இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி என்பனவும் இருந்தன.

ஆனால், 1977 இல் பதவிக்கு வந்த ஜே.ஆர். தலைமை தாங்கிய ஐ.தே.க. அவ்வாறானதொரு கட்சி அல்ல. அது முழுக்கு முழுக்க அந்நிய ஏகாதிபத்திய சக்திகளுக்கு ஆதரவான, உள்நாட்டில் பெரும் முதலாளித்துவ மற்றும் நிலப்பிரபுத்துவ சக்திகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஒரு கட்சி. எனவே அக்கட்சி தேசிய மற்றும் மக்கள் நலன்களை விட, மக்களைச் சுரண்டுகின்ற உள்நாட்டு – வெளிநாட்டு சக்திகளின் நலன்களையே பாதுகாத்து நின்றது. அதன் காரணமாகவே 77 இல் ஜே.ஆர். அரசாங்கம் திறந்த பொருளாதாரக் கொள்கை என்ற பெயரில் நவ தாராளவாதக் கொள்கையை நடைமுறைப்படுத்தி நாட்டின் அற்ப சொற்ப சுயசார்புப் பொருளாதாரத்தையும் இல்லாதொழித்தது. அதன் காரணமாக உள்ளூர் உற்பத்தி படுத்து, வெளிநாட்டுக் கடன்களும் அதிகரிக்க ஆரம்பித்தது. இந்த நவ தாராளவாதக் கொள்கையைக் காட்டிக் காப்பதற்கே 1978 இல் ஜே.ஆர். அரசு நிறைவேற்று ஜனாதிபதி முறையுள்ள எதேச்சாதிகார அரசியல் சட்டத்தையும் நிறைவேற்றியது.

ஜே.ஆருக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த ஆர்.பிரேமதாச, சந்திரிக குமாரதுங்க,

மகிந்த ராஜபக்ச போன்றோர் உட்பட இன்றைய கோத்தபாய ராஜபக்ச வரை, ஜே.ஆர். கொண்டு வந்த நவ தாராளவாதப் பொருளாதாரக் கொள்கையையோ, நிறைவேற்று ஜனாதிபதி முறைமையைக் கொண்ட அரசியல் அமைப்பையோ மாற்ற முயற்சிக்கவில்லை. அது மட்டுமின்றி, நாட்டின் இன்னொரு முக்கியமான தேசிய இனப் பிரச்சினை சம்பந்தமாகவும் ஆட்சியில் இருந்த எல்லா அரசாங்கங்களும் ஒரே விதமான கொள்கையையே பின்பற்றி வந்துள்ளன. இந்த நிலைமைகளின் தொடர்ச்சியும் வளர்ச்சியுமே இன்றைய பொருளாதார நெருக்கடிக்குக் காரணமாகும்.

எனவே, இன்றைய நெருக்கடிக்கு ராஜபக்சாக்கள்தான் காரணம் என்ற கருத்து மிகவும் தவறானதாகும். ஆனால் இந்த நெருக்கடி உருவானதில் அவர்களுக்கும் ஒரு பங்கு உண்டு. ஏனெனில் மகிந்த ராஜபக்ச 10 ஆண்டுகள் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாக இருந்துள்ளார். இப்பொழுது அவரது தம்பி கோத்தபாய ராஜபக்ச 3 ஆண்டுகளாக ஜனாதிபதியாக இருக்கின்றார். ஆனால் இவர்கள் இருவருக்கும் மக்கள் செல்வாக்கும், பாராளுமன்றப் பெரும்பான்மையும் இருந்துள்ளது. இவர்கள் நினைத்திருந்தால், நாட்டில் இப்படியான நிலைமைகள் உருவாகலாம் என்பதை முன்கூட்டியே உய்த்துணர்ந்து பொருளாதாரத் துறையிலும் அரசியல் அமைப்புத் துறையிலும் அடிப்படையான மாற்றங்களைச் செய்திருக்கலாம்.

இப்போதைய பொருளாதார நெருக்கடிக்கு கொவிட் பெருந்தொற்றையும் ரஸ்ய – உக்ரைன் மோதலையும் பிரதான காரணங்களாகக் காட்ட முயல்கின்றனர். அவையும் முக்கியமான காரணிகள் என்ற போதிலும், அந்த நிலைமைகள் ஏற்படாமல் இருந்திருந்தாலும் இலங்கை தற்போது எதிர்நோக்கும் நெருக்கடியை நிச்சயமாக எதிர்நோக்கி இருக்கும். கொவிட் மற்றும் உக்ரைன் பிரச்சினைகள் நிலைமையை மோசமாக்க உதவினவே தவிர அவை அடிப்படைக் காரணிகளல்ல.

69 இலட்சம் மக்களின் ஆதரவைப் பெற்ற ஜனாதிபதிக்கு எதிராகவும், மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்ற அரசுக்கெதிராகவும், மூன்று வருட காலத்துக்குள் மக்கள் திரும்புவதென்றால், அதன் அடிப்படைக் காரணம் மக்களின் வாழ்க்கை பாரதூரமாகப் பாதிக்கப்பட்டதுதான். அதையே எதிர்க்கட்சிகள் பயன்படுத்தி அரசியல் நெருக்கடியாகக் காட்ட முயல்கின்றன. அதன் காரணமாக மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்று பிரதமராக இருந்தவர் பதவி விலகி, கடந்த தேர்தலில் ஒரு உறுப்பினரைக் கூட பெற முடியாது தான் மட்டும் தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினரான ஒரு கட்சியின் தலைவர் பிரதமராகி இருக்கிறார்.

அதேநேரத்தில், நாட்டின் பொருளாதாரப் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட மக்களை வீதிக்கு இழுத்து வந்து தமது அரசியல் நோக்கங்களை குறுக்கு வழியில் ஈடேற்ற முயற்சிக்கும் அரசியல் கட்சிகளின் சதி, நாச வேலைகளையும் நாம் கவனத்தில் கொள்ளாமல் இருக்க முடியாது. இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு அந்தக் கட்சிகளும் காரணம் என்பதை அவர்கள் மறைத்துக் கொண்டு முழுப் பழியையும் இன்றைய அரசின் மீது சுமத்த முயல்கின்றனர். அவர்களது சதி நோக்கத்தை நாம் விளங்கிக் கொள்வதென்றால், அவர்களது விதண்டாவாதத்தைக் கவனித்தால் போதும். கடந்த பொதுத் தேர்தலில் படுதோல்வியடைந்த அவர்கள், பாராளுமன்றத்தில் தமது பெரும்பான்மையை நிரூபித்து ஆட்சிக்கு வர முயற்சிக்கவில்லை. அல்லது ஒரு புதிய தேர்தல் ஒன்றை நடத்தக் கோரி அதில் வெற்றி பெற்று வரும் தற்துணிபும் அவர்களுக்கு இல்லை. இன்றைய நெருக்கடியான தருணத்தில் அவர்களையும் உள்ளடக்கிய சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்த போது அதையும் அவர்கள் ஏற்கத் தயாராக இல்லை.

அவர்களது முழு நோக்கமும் எந்த ஜனநாயக வழிமுறைகளையும் பின்பற்றாது குறுக்கு வழியில் தாம் அதிகாரத்துக்கு வர வேண்டும் என்பதே. அதாவது, பெரும்பான்மையான நாட்டு மக்களால் தெரிவு செய்யப்பட்ட தற்போதைய ஜனாதிபதியும் அரசாங்கமும் பதவி விலகி அதிகாரத்தைத் தமது கைகளில் தர வேண்டும் என்பதே. அதற்காகத்தான் "கோத்தா வீட்டுக்குப் போ", "மகிந்தா வீட்டுக்குப் போ" என்ற கோசங்களை அவர்கள் தொடர்ந்து எழுப்பி வருகிறார்கள்.

அவர்கள் தமது நோக்கங்களில் இரண்டில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். ஒன்று, பிரதமராக இருந்த மகிந்தவை பதவி விலக வைத்து, தமக்கு இஸ்டமான ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக வர வழி சமைத்துள்ளனர். அத்துடன், தற்போதைய அரசாங்கம் சுயசார்பு பொருளாதாரத்தை உருவாக்க எடுத்த ஆரம்ப கட்ட முயற்சிகளைத் தவிடுபொடியாக்கி, ஏகாதிபத்திய சர்வதேச நாணய நிதியத்தின் காலில் தற்போதைய அரசாங்கத்தை விழ வைத்திருக்கின்றனர். அவர்களது அடுத்த இலக்கு ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவையும் எப்படியும் பதவி விலக வைப்பதுதான். அதையும் செய்து முடித்துவிட்டால், தமது சர்வதேச ஏகாதிபத்திய எஜமானர்களது ஆதரவுடன் ஆட்சி பீடத்தில் அமரலாம் என்பதுதான் அவர்களது நப்பாசை. இந்த விடயத்தில் வெளிநாட்டு சக்திகளின் - குறிப்பாக அமெரிக்காவின் - தலையீட்டுக்கு ஒரு உதாரணம், அண்மையில் கொழும்பில் உள்ள அமெரிக்க தூதுவர் தம்மைத் தீவிர சோசலிசவாதிகள் என்று சொல்லிக் கொள்ளும் ஜே.வி.பி. கட்சியின் தலைவர் அநுர குமார திசநாயக்கவை சந்தித்து உரையாடியமை. இது சாதாரண விடயமல்ல.


ஆனால் எது எப்படியிருப்பினும், இலங்கையில் பதவியில் இருந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசுகள் காலத்துக்குக் காலம் உள்நாட்டு – வெளிநாட்டுச் சக்திகளின் சதி, சூழ்ச்சி மற்றும் நாச வேலைகளால் பின்னடைவுகளைச் சந்தித்து வந்த போதிலும், ஏகாதிபத்திய எதிர்ப்பும் முற்போக்கு எண்ணமும் கொண்ட பெரும்பான்மையான இலங்கை மக்களால் அவர்கள் மீண்டும் மீண்டும் தூக்கி நிறுத்தப்பட்டு உயிரூட்டப்பட்டிருக்கிறார்கள். இந்த வரலாறு எதிர்காலத்திலும் தொடரும்.

---

தொல்லை கொடுப்பது, தோல்வி அடைவது, மீண்டும் தொல்லை மீண்டும் தோல்வி… தமது அழிவு வரை இது மக்களின் இலட்சியத்தை கையாள்வதில் ஏகாதிபத்தியவாதிகளும் பிற்போக்குவாதிகளும் மேற்கொள்ளும் தர்க்கம். அவர்கள் ஒருபோதும் இந்த தர்க்கத்திற்கு விரோதமாக செல்ல மாட்டார்கள். இது ஒரு மார்க்ஸிய விதி.

**–மாவோ**

# சீனாவுடனான உடன்பாடு சரியே! அமெரிக்காவிற்கு போப் பதிலடி!!



சீனாவில் மத உணர்வுகளைத் தூண்டிவிட்டுக் குளிர் காயலாம் என்று முயற்சி செய்து வரும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் கைகளைப் பிசைந்து செய்வதறியாமல் நிற்கின்றன.

சீனாவில் எந்த மதத்தையும் மக்கள் பின்பற்றுவதற்கான உரிமை உள்ளது. இங்கு புத்தமதம், தாவோயிசம், இஸ்லாம், கத்தோலிக்கம் மற்றும் கிறித்தவ சீர்திருத்த மதம் ஆகியவை இங்குள்ள பெரிய மதங்களாகும். எந்த மதத்தையும் சுதந்திரமாக தேர்வு செய்து கொள்ளவும், தங்கள் மத நம்பிக்கையை வெளிப்படுத்திக் கொள்ளவும், தாங்கள் இந்த மதத்தைச் சார்ந்தவர்கள் என்பதை வெளிப்படையாக சொல்லிக் கொள்ளவும் சீன மக்களுக்கு உரிமை இருக்கிறது. பல்வேறு மதங்களைப் பின்பற்றுபவர்களின் எண்ணிக்கை 10 கோடி இருக்கும் என்று அதிகாரபூர்வ புள்விவிபரம் தெரிவிக்கிறது. மத செயல்பாடுகளை மேற்கொள்வதற்காக 85 ஆயிரம் இடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

**சீனா – வத்திக்கான் உடன்பாடு**

சீனாவில் உள்ள கிறித்தவ தேவாலயங்களை நிர்வகிப்பது தொடர்பாக வத்திக்கானோடு நடந்த பேச்சுவார்த்தையில் ஒரு உடன்பாடு எட்டப்பட்டது. 2018 ஆம் ஆண்டில் முதல் உடன்பாடு போடப்பட்டது. பின்னர் அந்த உடன்பாடு செப்டம்பர் 2021ல் புதுப்பிக்கப்பட்டது. அந்த உடன்பாடின்படி, ஆயர்களை நியமிக்கும் அதிகாரம் போப்புக்கு வழங்கப்பட்டுள்ளது. மத சுதந்திரத்தில் மக்கள் சீனம் தலையிடுவதில்லை என்பதற்கு இந்த உடன்பாடு அடையாளமாகச் சொல்லப்பட்டது. ஆனால், டொனால்டு ட்ரம்ப் உள்ளிட்ட பலரும் இந்த உடன்பாட்டிலிருந்து வெளியேறுமாறு போப்பை வலியுறுத்தி வந்தனர்.

கத்தோலிக்க ஆயர்கள் நியமனத்தில் சீனக் கம்யூனிஸ்ட் அரசுடன் வத்திக்கான் நிர்வாகம் போட்ட உடன்பாடு மிகச் சரியானதுதான் என்று போப் பிரான்சிஸ் தெரிவித்ததால் சீர்குலைவு வேலைகளுக்கு வேகத்தடை போடப்பட்டது. அதோடு போப் நிற்கவில்லை. பேச்சுவார்த்தை அவசியம் என்றும், நாம் பேச்சுவார்த்தையை ஒருபோதும் கைவிட்டு விடக்கூடாது என்றும் குறிப்பிட்டார். ஆயர்கள் நியமனம் குறித்த சலுகையை சீனா தரும் என்று அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் எதிர்பார்க்கவில்லை. அப்படியே கொடுத்தாலும், அதை ஏற்றுக் கொண்டு அடுத்த கட்டத்திற்கு போப் நகருவார் என்பதையும் எதிர்பார்க்கவில்லை.

வத்திக்கானுக்கும், சீன அரசுக்கும் இடையிலான மோதல் போக்கை உருவாக்குவதன் மூலம் கிறித்தவ மதத்தைப் பின்பற்றுபவர்கள் மத்தியில் சீன எதிர்ப்புக் கருத்தை ஏற்படுத்துவதே, சீன எதிர்ப்பாளர்களின் முயற்சியாக இருந்தது. கலாச்சாரப் புரட்சி காலகட்டத்தில் நிகழ்ந்த தவறுகளைச் சரி செய்யும் பணியில் சீன அரசு வெற்றி பெற்றுவிட்டதால், உடன்பாட்டை ஏற்றுக் கொள்வதைத் தவிர வத்திக்கானுக்கும் கட்டாயம் ஏற்பட்டது. கத்தோலிக்கர்களில் உள்ள பிற்போக்குவாதிகள் இதை இப்போதும் கூட ஏற்றுக்கொள்ளாமல் இருக்கிறார்கள். ஆனால், பேச்சுவார்த்தை மூலம் ஆயர்கள் நியமிக்கும் உரிமை கிடைத்திருக்கிறது என்பதை சுட்டிக்காட்டி போப் சுட்டிக்காட்டுகிறார்.

மத செயல்பாடுகள் நடக்கும் இடங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று சீனாவில் உள்ள சட்டத்தை உரிமை மீறல் என்று அமெரிக்கா மற்றும் பிற்போக்கு மதவாதிகள் கூறுகிறார்கள். இத்தகைய நடைமுறை கிட்டத்தட்ட உலகில் உள்ள அனைத்து நாடுகளில் இருப்பதை சீன அரசு சுட்டிக்காட்டியுள்ளது. வீடுகளுக்குச் சென்று நடத்தப்படும் சேவைகளுக்கு பதிவு செய்வதோ அல்லது அனுமதி கேட்பதோ அவசியமில்லை. பைபிள் வாசிப்பு மற்றும் பிரார்த்தனைகள் ஆகியவை மிகவும் சுதந்திரமாக நடத்தப்படுகின்றன.

**மதம் வேறு, கல்வி வேறு**

கல்வியையும், மதத்தையும் பிரித்து வைத்துள்ளனர். பள்ளிக்கூடப் பாடப்புத்தகங்களில் மதம் சார்ந்த பாடங்கள் இல்லை. ஆனால், மத அமைப்புகள் இது தொடர்பான கூட்டங்களை நடத்திக் கொள்வதற்கு எந்தவிதத் தடையும் இல்லை. மதம் சார்ந்த கல்லூரிகள் மற்றும் பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை 74 என்று சீன அரசு தரும் புள்ளிவிபரமே சொல்கிறது. மதம் சார்ந்த நடவடிக்கைகளுக்குத் தேவையானவர்களை உருவாக்கும் பணியை அந்த கல்லூரிகள் மற்றும் பள்ளிக்கூடங்கள் செய்கின்றன.

மக்கள் சீனக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தில் மத நம்பிக்கை என்பது அனைத்து குடிமக்களுக்குமான அடிப்படை உரிமையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சட்டத்தில் 36வது பிரிவில், 'எந்தவொரு அரசுத்துறையோ, அரசு அமைப்போ அல்லது தனிநபரோ நம்பிக்கை வைக்குமாறோ அல்லது, நம்பிக்கை வைக்க வேண்டாம் என்றோ மக்களைக் கட்டாயப்படுத்தக்கூடாது. நம்பிக்கை வைத்திருப்பவர்களை அல்லது நம்பிக்கை வைக்காதவர்களைப் பாரபட்சத்தோடு நடத்தக்கூடாது' என்று கூறுகிறது. மேலும், 'பொதுவான அமைதியைக் குலைக்கும் வகையில் மதத்தை யாரும் பயன்படுத்தக்கூடாது. மத அமைப்புகள் மற்றும் மத விவகாரங்கள் அந்நிய ஆதிக்கத்திற்கு உட்பட்டதல்ல' என்றும் தெரிவிக்கிறது.

சீனாவின் அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள உரிமைகள் மற்றும் அம்சங்கள், நடைமுறையில் அப்படியே பின்பற்றப்படுகிறது என்று சீன அரசு சுட்டிக்காட்டியுள்ளது